
# விக்னகம்

உண்மையே வெல்லும்

VIGNESWARA COLLEGE
TRUTH TRIUMPHS
KARAVEDDY



Wallington Hall
Stanford Road,
Wallington
Surrey
SM6 9AQ

Oct 6
2007

விக்னேஸ்வரா பழைய மாணவர் சங்கம்
பிரித்தானியா

*21, Poulton Avenue*
*Sutton, Surrey SM1 3PZ*

TELECOM MOBILE SALES & SERVICE **PHONE-IN**

(CROYDON) LIMITED

# Dont Pay more than you need to

## We provide all types of upgrade services for FREE



At PHONE-IN we will find the right tariff to suit you.

At PHONE-IN we will fit all car kits and come to you wherever you are in the UK.

At PHONE-IN we provide all information and professional advice concerning your phone & accessories.

## We will review your tariff

## FREE OF CHARGE

248 High Street, Croydon,
Surrey, GR0 1NF
Tel: 020 8667 9885
Fax: 020 8667 9871
e-mail: phonein@btconnect.com

# கல்லூரிக் கீதம்

**பல்லவி**

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

**சரணம்**

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்
(வாழ்கவே)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாகத்
திறன்பணி கண்டிடுவோம்
(வாழ்கவே)

வர்த்தக இயலும் தொழில்முறை கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நற்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே)



எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றதை கூறிடுவோம்
(வாழ்கவே)



# தலைவரின் ஆசிச்செய்தி

"காலத்தினால் செய்த உதவி சிறிதேனும் - அது
ஞாலத்தின் மாளப்பெரிது"

எமது கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்கம் வீறுநடையுடன் வெற்றிகரமாக இன்று மூன்றாவது வருட நிகழ்வைக் காண்பதையிட்டு பெருமிதம் கொள்ளும் அதே வேளை இக்கல்லூரி மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது பிரித்தானியா கிளையின் இந்த வளர்ச்சிக்கு பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் நல்கிக்கொண்டிருக்கும் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவிப்பதோடு எதிர்காலத்தில் இன்னும் பெருவிருச்சமாக வளர்ந்து எமது கல்லூரியின் வளர்ச்சிக்கும் எமது தாய்நாட்டின் பெருமைக்கும் மெருகூட்ட எனது வாழ்த்துக்கள்.

இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினர் எமது கல்லூரியின் பழைய மாணவனும் கனடா பழைய மாணவ சங்கச் செயலாளருமான திரு. சிற்றம்பலம் அம்பிகாவரன் அவர்கள் கலந்துகொண்டிருப்பது சாலப்பொருத்தமாக அமையும் என்பது எனது திண்ணம்.

"வாழ்கவே, வளர்க வாழ்கவே வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே வாழ்கவே"

திரு வேலுப்பிள்ளை லீலாரட்ணம்
தலைவர்

# கல்லூரி அதிபரின் எண்ணங்கள்



"உண்மையே வெல்லும்" எனும் மகுட வாசகத்தின் வழி இன்று எமது கல்லூரி நூற்றாண்டு விழா நோக்கி காலடி எடுத்து வைத்துள்ளது. கடந்த தொண்ணூறு ஆண்டுகளில் "நாம் தளர மாட்டோம்" எனும் மன உறுதியுடன் எமது தவப்புதல்வர்கள் படைத்த சாதனைகள் எமது கண்முன் நிழல் ஆடுகிறது. இச்சாதனைகளைப் படைக்க முன்னின்று உழைத்த எமது போற்றத்தகு ஆசிரிய முன்னோடிகளையும் அவர்களை வழிநடத்திய அதிபர்களையும் நினைவு கூற வேண்டியவர்களாக உள்ளோம்.

விக்னேஸ்வராவின் ஆரம்பம் எனும்போது சித்த மணியம் உடையார் என இன்றும் எம் மக்களால் நினைவுறுத்தப்படும் அமரர் வீரவாகு சிற்றம்பலம் எமது ஞாபகத்திற்கு வருகின்றார். அக்காலத்தில் சைவம், தமிழ் என்பவற்றை வளர்க்க கரவெட்டியில் ஒரு ஆறுமுக நாவலராக செயற்பட்ட வள்ளல் ஆவார். அவர் வழியே அடுத்து வந்த அவரது உறவினர்கள் கல்லூரி முகாமையாளராக செயற்பட்டதால் அவரது எண்ணமும் போற்றிப் பாதுகாக்கப்பட்டது. குறிப்பாக இந்தியாவிலிருந்த புலமைமிக்க ஆசிரியர்களை வரவழைத்து எம் மக்களின் கல்வியினை மேம்படுத்துவதில் முன் நின்றதுடன், ஆங்கிலக் கல்வி அளிப்பதில் கவனம் செலுத்தினர். இதன் விளைவு கரவெட்டி கிராமத்தில் அரசு தொழில் பெற்றோர் சதவீதம் அதிகரித்தது மாத்திரமின்றி சூழ உள்ள கிராமங்களில் இருந்து ஏன் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் மாணவர், விக்னேஸ்வராவை நோக்கி நகர்வு, ஏற்பட்டது என்றால் மிகையாகாது.

கரவெட்டி மக்களின் அப்போதைய சிந்தனையாக " இது எங்கள் பாடசாலை இதை நாம் பேணிப் பாதுகாப்போம்" எனும் மன உறுதி கொண்ட பற்று, பாடசாலையினை பட்டி திட்டி எல்லாம் பெயர் மேலோங்க வைத்தது. இங்கு எமது கண்முன் வருபவர்கள் கரவெட்டி மண்ணின் புகழ்பூத்த மைந்தர்கள் ஆன அமரர் உயர்திரு மு.சிவசிதம்பரம், உயர்திரு க. ஜெயக்கொடி, உயர்திரு பொன் இராமலிங்கம் போன்றோர். இன்றும் எமது கல்லூரி அவர்கள் பெயர் சொல்லி வாழும் அளவுக்கு அவர்கள் கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்கள். இன்னும் கூறப்போனால் கல்லூரி அதிபர்கள் வேற்றுக் கிராமத்தவர்களாக இருந்தபோதிலும் அப்போதைய ஆசிரியர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் கரவெட்டியில் இருந்தே வந்தார்கள். இது ஸ்தாபகர்களின் மனதில் இருந்த ஊற்றோ தெரியாது. பெரும்பாலும் கல்லூரிச் சூழல், அயற்சூழலில் இருந்தோரே பெரிதும் ஆசிரியர்களாக அமர்ந்தார்கள். இது மாணவரிடையே பாடசாலைப் பற்றை வேர் ஊன்றச் செய்தது மாத்திரம் அன்றி கல்லூரிக்கு என

தனிச் சிறப்பையும் ஏற்படுத்தியது. இதுவே இன்றும் "கரவெட்டியின் பண்பாட்டுச் சின்னம்" விக்னேஸ்வரா என்றும், போற்றும் அளவுக்கு கல்லூரியின் புகழ் பூத்த மைந்தர்களில் ஒருவரான பேராசிரியர் திரு சிவதம்பி அவர்களால் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு வானுயர வளர்த்தது.

1960களின் பின் முகாமைப் பொறுப்பு அரசு பொறுப்பேற்றதின் பின்பு கூட அப்போது இருந்த ஆசிரியர்கள் ஸ்தாபகரின் சிந்தனைக்கு உரம் கொடுத்து கல்லூரியினை வளர்த்து எடுத்துச் சென்றார்கள். இது அகில இலங்கை ரீதியாக கல்லூரி விளையாட்டுக்கள் ஆயினும் சரி கல்வியில் ஆயினும் சரி தனக்கென ஒரு இடத்தை ஏற்படுத்தி சாதனைகள் படைத்தது எனின் மிகையாகாது. இன்றும் எம்முடன் வாழும் மைந்தர்கள் தமது எண்பதுகளில் கூடி கல்லூரியின் அப்போதைய நினைவுகளை மகிழ்ந்து எம்முடன் பகிரும்போது அவர்கள் முகத்தில் ஏற்படும் மலர்ச்சி எமக்கு ஒரு மன உந்துதலை அளிக்கிறது. உண்மையைக் கூறப்போனால் இடதுசாரி சிந்தனை கொண்டவர்கள் கூட இக்கல்லூரியினை நாடி வந்துள்ளார்கள் என்றால் அது வின்னேஸ்வராவின் தனிச்சிறப்பும் தனித்துவமும் ஆகும்.

அன்றும் இன்றும் கூட எமது கல்லூரி, வந்தோரை வரவேற்கும் பெரு விருட்சமாக, அமைவது எமக்குப் பெருமை தருகிறது. இந்நிலையில் பழமைபேணும் நினைவுச் சின்னமாகவும் புதுமை படைக்கும் கல்விப் பெருவிருட்சமாகவும் தொடர்ந்தும் வீறு நடைபோட கடல் கடந்த நாடுகளில் இடம் பெயர்ந்து வாழும் எமது அன்னை பெற்ற தவப்புதல்வர்களின் செயற்பாடுகள் எமக்கு ஊக்கம் அளிப்பதுடன் எமது செயற்பாடுகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல உந்து சக்தியாக அமைகிறது.

இலண்டன் மாநகரில் வாழும் எமது பழைய மாணவர்கள், மாணவிகள், கரவெட்டி வாழ் மக்கள் யாவரும் சேர்ந்து எமது பாடசாலையையும், கிராமத்தையும் வளர்க்க எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்கு உரியன. குறிப்பாக முன்நாள் ஆசிரியர்கள், ஆசிரியைகள் எமது கல்லூரியின் பௌதீக வளங்களைப் பெருக்கும், மாணவர்களை ஊக்குவிக்கவும் எடுக்கும் முயற்சிகட்கு அதிபர் என்ற முறையில் எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதே நேரம் சென்ற வருடம் பாடசாலை மட்டத்தில் கட்டுரைப் போட்டி நடாத்தி முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கட்கு பெறுமதியான அன்பளிப்பை நல்கிய இலண்டன் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், சென்ற வருடம் நடைபெற்ற க.பொ.த. உ.த. பரீட்சையில் 3A பெற்று மாவட்ட மட்டத்தில் 1ம் நிலைக்கு வந்த மாணவன் கை. திருக்குமரன் அவர்கட்கு ரூபா 10.000/ அன்பளிப்புத் தொகை வழங்கி ஊக்குவித்தமைக்கும், 2005ல் எமது கல்லூரி முன்னேற்றத்துக்காக ரூபா 500.000/ நல்கி எம்மை ஊக்குவித்தமைக்கும்

என்றென்றும் எமது நன்றிகளைப் பாடசாலைக் கல்லூரி சமூகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வேளையில் நூற்றாண்டு விழாவை நோக்கி காலடி எடுத்துவைக்கும் இவ்வேளையில் நாம் வேண்டி நிற்பவற்றையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

1) கல்லூரிக்கு தெற்குப் புறமாக அமைந்துள்ள கணக்காளர் வேலாயுதம் அவர்களின் 7 பரப்புக் காணியை கல்லூரிக்குக் கொள்வனவு செய்ய உதவுமாறும்,
2) கல்லூரி கணனி கூடத்துக்கு நிரந்தரமாக ஒரு கணனி அறிவு பெற்ற ஒருவரை நியமித்து அவருக்கு மாதாந்தம் ரூபா 4000/- வழங்க உதவுமாறும்,
3) கல்லூரிக்கு அன்பளிப்பாக முன்னாள் ஆசிரியர் திருமதி. சின்னம்மா திரு. டொமினிக் அவர்களால் வழங்கப்பட்ட காணியினுள் ஒரு Basket Ball ஆடுகளம் அமைக்க உதவுமாறும்,
4) கல்லூரி, கல்லூரியிலுள்ள வகுப்பறைகள் யாவற்றுக்கும் மின் இணைப்பு செய்ய உதவுமாறும்,
5) கல்லூரி, கட்புல செவிப்புல சாதன அறைக்கு மாணவர் பயன்பாட்டுக்கு என ஒரு Multi Media projector screen என்பவற்றை தெரிவு செய்ய உதவுமாறும் பேரன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கடல் கடந்து இலண்டன் மாநகரில் வாழும் எமது தவப்புதல்வர்கள் போன்று கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் எமது பிள்ளைகள் எனது கல்லூரியின் வளரச்சிக்கு இங்கு பழைய மாணவர்கள் சங்கங்களை அமைத்து தங்களுடன் தொடர்பு கொள்ள உதவுமாறும் இவ்வேளையில் அழைப்பு விடுகின்றேன்.

இறுதியாக "கரவெட்டியின் பண்பாட்டு சின்னம் விக்னேஸ்வரா" எனும் வாசகத்தை எமது மக்களிடமும் அங்கும் இங்கும் நிலை நிறுத்தி "கரவெட்டிதான் விக்னேஸ்வரா" "விக்கினேஸ்வராதான் கரவெட்டி" என பட்டிதீட்டி எங்கும் ஒலிக்க அதிபராகிய எனக்கு உதவுமாறு அங்குள்ள கரவெட்டி வாழ் பெருமக்களையும், பழைய மாணவர்களையும் இங்கு வாழும் பெருமக்களையும், பழைய மாணவர்களையும் வேண்டி தாங்கள் எடுக்கும் இப்பெருவிழா சிறக்க எம்மை காக்கும் வெல்லனிற் பிள்ளையாரையும் உச்சியில் அம்பாளையும், தச்சை விநாயகரையும் வேண்டி விடை பெறுகின்றேன்.

"நாம் தளரமாட்டோம்"

**திரு. வேலுப்பிள்ளை சிவசிதம்பரம்**
அதிபர், விக்னேஸ்வராக் கல்லூரி,

## பழைய மாணவர் சங்கம் யா/விக்கினேஸ்வராக் கல்லூரி

21, Poulton Avenue,
Sutton, Surrey SM1 3PZ
020 8644 9748
ஐக்கிய ராச்சியம் (UK)

அன்புடையீர் !

**"அன்பில்லார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார்,
என்பும் உரியர் பிறர்க்கு"**

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க பல அன்புடையவர்களின் ஆதரவினால் மூன்றாவது ஆண்டில் கால் பதிக்கின்றோம் என்பதை பெருவுவகையுடன் கூறிக்கொள்கிறோம். நமது படைசாலைக்கு உதவுகின்றோம் என்பதை விட எமது பழைய உறவுகளை நினைவு படுத்துவதுடன் எமது சிறார்களின் இயல் இசை நாடகத்திறன்களை வெளிக் கொணர்வதன் மூலம் எமது தமிழ் மொழியையும் கலாச்சாரம் பண்பாட்டையும் வளர்ப்பதற்காக நாம் ஒவ்வோர் ஆண்டும் ஒன்று கூடுவோமாக, "காய்க்கும் மரந்தான் கல்லெறிபடும்" என்பார்கள் உண்மைதான் உதவி செய்ய வருபவர்கள் கல்லெறிப்படுகிறார்கள். நல்லது செய்ய விரும்புவோரை சும்மாவிருந்து வேடிக்கை பார்ப்பவர்கள் அவர்களைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். இன்றைய எமது நிலையிலும் நாம் இப்படி தொடர்வது எமது இனத்திற்கே இழுக்கு. பார்வையாளர்களாக இல்லாது பங்காளர்களாக இணைந்து செயலாற்றுப் படி கேட்டுக் கொள்கிறேன். முதல் வருடம் நடாத்திய கலை விழாவின் போது சேர்ந்த பணத்திலிருந்து **£3000** பவுண்ஸ் விக்கினேஸ்வராக் கல்லூரிக்கும் **£500** பவுண்ஸ் மாணிக்க வாசகர் வித்தியாலயத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டது, 2வது முறை நடந்த கலைவிழாவின் போது சேர்ந்த பணம் வங்கிக்கணக்கில் இருக்கின்றது. சென்ற வருட வருமானச் செலவுக் கணக்கு கீழே தரப்படுகின்றது.

## வருமானச் செலவுக் கணக்கு -2006

**வருமானம்**

| | | |
|---|---|---|
| நுழைவுச்சீட்டு விற்பனை | £4190.00 | |
| விளம்பரம் | £1750.00 | |
| புத்தக விற்பனை | £223.20 | |
| **நன்கொடையாளர்** | | |
| திரு.S. மதிவதனன் | £450.00 | |
| திரு.திருமதி. கலையரசன் | £80.00 | |
| திரு. கலைச்செல்வன் | £60.00 | |
| திரு. S. பாலசுந்தரம் | £50.00 | |
| திருமதி. S. கந்தவேல் | £80.00 | |
| ஆயுட்கால உறுப்புரிமை | £500.00 | |
| இவ்வருட சா. உறுப்புரிமை | £40.00 | |
| சாப்பாடு விற்பனை | £397.00 | |
| சிற்றுண்டி விற்பனை | £222.00 | |
| குளிர்பானம் | £136.45 | |
| | £8178.65 | |

**செலவு**

| | | |
|---|---|---|
| மண்டப வாடகை | £660.00 | |
| பாதுகாப்பு | £160.00 | |
| குளிர்பானம் | £97.20 | |
| நுழைவுச் சீட்டு அச்சடித்தல் | £83.00 | |
| தொலைக்காட்சி விளம்பரம் | £450.00 | |
| புத்தகம் அச்சடித்தல் | £500.00 | |
| ஒலி ஒளி | £600.00 | |
| சாப்பாடு | £550.00 | |
| பற்றுச்சீட்டு | £130.00 | |
| சில்லறைச் செலவுமுற்பணம் | £200.00 | |
| | £3430.20 | மீதி: £4748.45 |

**சில்லறைச் செலவுக்கணக்கு**

| | | |
|---|---|---|
| முற்பணம் | £200.00 | |
| தபாற் செலவு | £42.89 | |
| தொலைபேசி | £25.00 | |
| பிரயாணச் செலவு | £18.50 | |
| பரிசுப் பொருட்கள் | £48.48 | |
| | £134.87 | மீதி: £65.13 |
| | | மீதி: 4813.58 |

# விக்னேஸ்வரா என் வீடு

எனக்கும், விக்னேஸ்வராக் கலலூரிக்கும் உள்ள பிணைப்பு தனித்துவமானது. எந்த மாணவரும் கல்லூரியில் படிக்கும் காலங்களில் அல்லது ஏதாவது விசேட தினங்களில் தான் பாடசாலையைத் தரிசிப்பார்கள். ஆனால் நானோ, பிறந்து நடக்கத் தொடங்கிய நாளிலிருந்து நாட்டைவிட்டு வெளியேறும்வரை இக் கல்லூரிக் 'கேட்' டடியில் நின்று குஞ்சரமக்கா என்ன சமைக்கிறார் என்பதை இலகுவாக ஊகிக்க முடிவது போன்று, பள்ளிக்கு யார் யார் பிந்திப் போகிறார்கள், என்ன உடை அணிந்து செல்கிறார்கள் என்பதையும் எமது 'விறாந்தையில்' நின்று கூற முடியும். மேலும், எனது இளமைக் காலங்களில், நான் துயில் கொள்ளாத ஏனைய நேரம் போனது விக்னேஸ்வரா வளவில் தான். ஒரு தடைவ, எனது வீட்டுப் பின்புறத்தில் வைக்கோல் பட்டடைத் தீப்பற்றிக் கொண்ட போது விக்னேஸ்வரா மாணவர் தீயனைக்கும் படையினராகத் தொழிற்பட்டதும், கல்லூரி ஆசிரியர், மாணவர் தலைச்சுற்று, மயக்கம், வயிற்றுக் குழப்பம் போன்றவற்றால் பாதிக்கப்படும்போது பரிகாரம் செய்யும் பணிமனையாக எங்கள் வீடு அமைந்தமையும் என் நெஞ்சிலிருந்து நீங்காத நினைவுகள்.

எனக்கு அறிவு தெரிந்த ஆரம்ப கால நினைவுகளையும் மீட்டுப்பார்க்கிறேன் அதிபர் பத்மநாத பிள்ளை அவர்களின் வட்டக் கண்ணாடி போட்ட நடு உச்சிவிட்டுத் தலைவாரி விட்ட முகம் இன்னும் என் கண்முன்னால் நிற்கிறது. அப்போது நான் அரிவரிகூடப் படித்தேனோ தெரியாது. அவர் கல்லூரியின் தெற்கேயுள்ள 'சரஸ்வதி வில்லாவில்' சிலநாட்கள் தங்கியதும், பின்பு வீடு மாறியதும் கூட எனக்கு நினைவிருக்கிறது. அதுமட்டுமல்ல, அவரது பிரியாவிடையின்போது, கல்லூரி முற்றத்தில் அப்போது விளையாட்டு மைதானம் இருக்கவில்லை சிகரம் கட்டி, அதில் எனது அண்ணன் (ஈசன்) மஞ்சள் மேற் சட்டை, நீலக் காற்சட்டையுடன் நின்று ஆங்கிலத்தில் பேசியது கூட எனக்கு ஞாபகம், (என்ன பேசினார் என்பது எனக்குப் புரியாத வயது).

இவற்றை ஏன் கூறுகிறேன் என்றால், எனக்கு அறிவு தெரிந்த காலங்களில் இருந்தே விக்னேஸ்வராக் கல்லூரியில் நிகழ்ந்த சம்பவங்கள், காட்சிகள் என்பவைதாம் இந்தப் பிஞ்சு மனதின் பதிவுகள். ஒருவருடைய உருவாகும் பருவம் (formative years) ஐந்து அல்லது ஆறு வயது வரை என்பது உளவியல் நரம்பியல் நிபுணர்களின் கருத்து,

அதன்படி, விக்னேஸ்வராவின் கலை நிகழ்ச்சிகள், திருமுருக கிருபானந்த வாரியார், அ. ச. ஞானசம்பந்தன், வித்வான் வேந்தனார் போன்ற அறிஞர்களின் சொற்பொழிவுகள் பேச்சுப் போட்டிகள், கரப்பந்தாட்டப் போட்டிகள், கல்வி அமைச்சர் S.D.பண்டாவின் வரவேற்பு வைபவங்கள் என்பவைதாம் இந்தப் பச்சிளம் பாலகப் பராயப் பதிவுகள், இவையே எனது ஆளுமையை உருவாக்கிய பிரதான பின்புலம், இதனாலோ என்னவோ, அடியேனுக்கு இன்னும் விக்னேஸ்வரா மாதா மீது தளராத, கனங்கமற்ற பாசம், பந்தம்.

எழுத்தறிவித்தவன் இறைவன். இறைவன் அருள் பாலிக்கும் தலம் கோவில். அப்படி இருக்க, அந்தப் பரிசுத்த அறிவாலயத்தை வீடு எனக் கூறுவது எத்தனை மடமை? ஆயினும், இந்தக் 'கோவிற் பூனைக்கு' அந்தப் புனித கோவில் 'வீடு' தானே! அத்துணை உரிமையோடும், நெருக்கத்தோடும், இறுக்கத்தோடும் எங்கள் கலைகோவிலை நான் பார்க்கிறேன் ...தவறில்லையே!

கல்லூரிக்கும், என்வீட்டுக்கும் உள்ள இன்னுமோர் நெருங்கிய தொடர்பு, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எங்களது நுகவில் வயற் கிணற்றிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கல்லூரிக்கு நீர் வழங்கப்பட்டது. இதற்கு என் தந்தையார் ஐ. சி. யின் விவேகமும், முகாமையாளர் கே. சி. யின் விசால மனதுமே காரணம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

கல்லூரி வளவைப் பயன்படுத்திய யான் இங்கே உள்ள கல்வியின் வளனைப் பயன்படுத்தினாரோ என்ற கேள்வி எழுத்தான் செய்கிறது. 5ம் வகுப்பு தெரிவுப் பரீட்சை (selective Test Conducted by the Vadamaradchy Teachers Association ( V.T.A), 8ம் வகுப்புத் தெரிவுப் பரீட்சை ( V.T.A), 8ம் வகுப்பு வடமாகானப் பரீட்சை (Conducted by Northern Pronnie Teachers Association N.P.T.A), S.S.C (Senior School Certificate) தேசியப் பரீட்சை (Conducted by the Ceylon Government Exanination Department) இவை யாவற்றையும் அடியேன் முதல் தடவையே முதலாம் பிரிவில் சித்தி எய்தினேன். வடமராட்சியிலும், வடமாகாணத்திலும் முதலாவதாகப் புள்ளிகள் பெற்றுப் பரிசும் பெற்றேன். இவற்றைவிட பாடசாலைத் தவணைப் பரீட்சைகளிலும் நான் படித்த காலத்தில் (1955 – 1957) அநேகமாக முதலாவதாகவும் சிலவேளை முதல் மூன்று மாணவருள்ளுமாகச் சித்தி எய்தியமையைப் பாடசாலைத் தவணை அறிக்கைகள் சான்று பகரும். விக்னேஸ்வராவின் அடிப்படை

அத்திவாரமே பொது நல அரசு நாடுகளில் உள்ள ஆசிரியரிடையே நடந்த விஞ்ஞான கணித கட்டுரைப்போட்டியில் 1981 ம் ஆண்டு வெற்றி பெற்றமைக்கான பிரதான காரணம் என்று பெருமைப்படுகிறேன்.

மாதா பிதாவைக் காட்ட, பிதா குருவைக் காட்ட, குரு இறைவனைக் காட்டுவார் என்ற தன்மையினாலே மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். முன்னைய மூன்றையும் விக்னேஸ்வராவில் காணும் பேறுற்றேன். என் கல்லூரிக்குச் செய்யும் சேவை மூலம் தெய்வத்தைக் காணும் பேறடைவேன் என்பதாலும் விக்னேஸ்வராவை என் வீடென்றேன்.

1917 இல் சிறு கொட்டில்களாக ஆரம்பித்து, மாடிக்கட்டிடங்கள், விளையாட்டு மைதானம், ஆய்வு கூடங்கள் கொண்ட S.S.C வகுப்பு வரையுள்ள கல்லூரியாக வளர்ந்து, G.C.E A/L வகுப்புக்கள் பயிற்றுவிக்கும் பாடசாலையாய் உயர்ந்து, எதிர்காலத்தில் தொழில் நுட்பக் கல்லூரியாகவோ, பல்கலைக் கழகமாகவோ என்றோ ஒருநாள் பரிணமிக்கக்கூடிய விதத்திலே (வீண் கனவல்ல) அயலிலுள்ள நிலங்களைப் பாடசாலைக்கு உரியதாக்கும் முயற்சிகளிலே ஈடுபடுவோம் என்று உறுதி கொள்வோம் (உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்)

யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஐ. இ. கிளை அங்கத்தவர்கள் திரண்டு நின்று இயங்கி அவர்களது 3 வது ஆண்டை நிறைவேற்றும் இப் புனித சந்தர்ப்பத்தில் அவர்களைக் கனடா வாழ் கரவைமக்கள், தனது 8 வது ஆண்டை நிறைவு செய்யும் கரவெட்டி ஒன்றியத்தினூடாக வாழ்த்துகிறார்கள். நாங்களும் உங்களுக்கு உறுதுணையாகத் தொழிற்பட்டுக் கல்லூரியின் மேம்பாட்டுக்கு உழைப்போம் என்று திடசங்கர்பம் கொள்வதோடு கல்லூரி ஸ்தாபகர் சித்தி மணியம், பொன்னுமணியம் ஆகியோர் சந்தானம் வாழ்க என வாழ்த்துகிறோம்.

நன்றி வணக்கம்.

**ஐ. சி அம்பிகாவரன்**
*பழையமாணவன் - விக்னேஸ்வராக் கல்லூரி*
*தலைவர் - கரவெட்டி ஒன்றியம் (கனடா).*

***

# கல்லூரியும் நானும்

# என் ஒரு சில நினைவுகள்

பனை வடலி வளவில் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளிகூடம், சகல துறைகளிலும் பல சாதனைகளைப் புரிந்து இன்று பெரியதோர் அறிவாலயமாகியுள்ளது. தொழிற்கூடம், மனையியற்கூடம், கவின்கலைக் கூடம், விஞ்ஞானகூடம் முதலிய பல கலைக்கூடங்களையும் கொண்ட பெரிதொரு கல்லூரியாக வளர்ந்துவிட்டது. இதன் வளர்ச்சிக்கு தாபகர் சித்த மணியகாரன் தொடக்கம் அவர் சந்ததியினர், பல பெரியார்கள், கல்விமான்கள் நிர்வாகிகள் துணைபோயுள்ளனர்.

**க. கந்தசாமி**
முன்னாள் கல்விப்பணிப்பாளர்
யாழ் வடக்கு வலயம்

**கரவெட்டியில் வளர்ந்தது, வளர்கிறது, வளரும் விக்னேஸ்வரா.**

*இப்போது நாம் கல்லூரியும் அதன் வளர்ச்சி பற்றியும் பார்ப்போம்:*

அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக்காலத்தில், எமது சுதேசியப்பண்பாடும் சுதேசிய மதங்களும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் எமது பண்பாட்டையும் மதத்தையும் பேணிக்காக்க முற்பட்டவர்கள் பலர். அவர்களில் கரவை சிற்றம்பல முதலியாரும், அவரது வழித்தோன்றியவர்களும் எமது மண்ணில் முதன்மையிடம் பெறுகின்றனர் - முதலியாரின் அயராத முயற்சியால் ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்காக 1917 ல் பிரசவிக்கப்பட்ட பாடசாலையே விக்னேஸ்வராக் கல்லூரியாகும்.

**வ. செல்வராசா**
முன்னாள் அதிபர்.

தமிழும் சைவமும் பாரம்பரியப் பண்பாடும் செழித்தோங்கிய பழம் பெருமை வாய்ந்த கரவையம்பதியில், பெருங்குடிமகனாக விளங்கிய, தென்மராட்சி மணியகாராக ஒரு காலத்தில் செயலாற்றிய - இராசவாசல் முதலியார் வீரவாகு சிற்றம்பலம் அவர்கள் தமிழுடன் இனைந்து ஆங்கிலக் கல்வியையும் ஓங்கி வளர்க்க வேண்டும் என்ற போராவலுடன் விக்னேஸ்வராக் கல்லூரிக்கு கால்கோள் கொண்டமை என்றும் எவராலும் போற்றிடற்குரியதே. இவரது மைத்துனர் சின்னத்தம்பி முதலியார், கரவெட்டியிலும் அதன் கிராமங்களிலும் ஆங்கில அறிவை மேன்மையுறச் செய்யும்பொருட்டு இப்பாடசாலையை பெருமனத்துடன் தொடர்ந்து நடாத்தி

வந்தார். சிறு குடிலாக அமைக்கப்பட்ட இப்பாடசாலை பெருங்குடிலாயாக பெருமை பொருந்திய நிரந்தரக் கட்டிடமாக அமைந்த பொழுது பெருமைக்குரிய முன்னாள் அரசாங்க அதிபர் பி. எஸ் கோங்பேக் அவர்கள் 6.10.1917ல் அதனைக் கலாலயமாக திறந்துவைக்கும் பெரும்பேறு பெற்றார். எம் நாட்டில் திரு. பொன் கந்தையா, திரு. மு சிவசிதம்பரம், திரு. ஜெயக்கொடி ஆகிய உயர்ந்த அரசியல் தலைவர்களையும் திரு க. சிவத்தம்பி போன்ற பேராசிரியர்களையும் சிறந்த நிருவாகிகளையும் மற்றும் பல்துறை வல்லுநர்களையும் மனமுவந்து உற்பவித்த பெருமை இப்பாடசாலையின் ஆளுமையையும் அணுகுமுறைமையையும் உணர்த்தவல்லது.

**கா. மாணிக்கவாசவர்**
முன்னார் அரச அதிபர்.

**கல்லூரியின் வரலாறு**

திரு. வீரவாகு சிற்றப்பலம் அவர்கள் தொன்மராட்சி மணியகாரனாக பணியாற்றும் காலத்தில் மூலைப்பாடசாலையொன்றில் ஆங்கில மொழி அவசியத்தை உணர்ந்து, நுகவில் வயல்களுக்குக் கிழக்குப் புறத்தில் அமைந்திருந்த தனது உறவினர் சின்னக்குட்டி கந்தப்பு என்பவரின் காணியில் 1917 ம் ஆண்டு விக்னேஸ்வராக் கல்லூரியை அமைத்தார். ஆரம்பகாலத்தில் கிடுகுக் கொட்டிலாக இது அமைக்கப்பட்டது. 6-10-1917ல் அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்து நிரந்தர சுண்ணக்கற் கட்டிடங்கள் பல 1936 ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நிறுவப்பட்டன.

1917 ல் கரவெட்டி வடக்கைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை அவர்கள் முதல் முகாமையாளராக கடமையேற்றார். இவரும் திரு. வ. மயில்வாகனம் என்பவரும் கற்பித்தலையும் கூடவே செய்து வந்தனர்.

திரு. வீரகத்தி கனகசபை (கட்டைக்கிளாக்கர் - பின்னர் அதிபர் திரு. கனகசபை சிவபாதசுந்தரத்தின் தந்தை) பாடசாலை அலுவலராகச் சேவையாற்றினார்.

1920ல் இராசவாசல் முதலியார் திரு. கந்தப்பு சின்னத்தம்பி அவர்கள் முறைப்படியான முகாமையாளராக கடமையேற்றார்.

1920ல் கல்லூரி ஆங்கிலப் பாடசாலையாக அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது.

பாடசாலையின் முதலாவது அதிபராக கரணவாய் வடக்கு நவிண்டிலைச் சேர்ந்த திரு V.K. கிருஷ்ணபிள்ளை BA அமர்த்தப்பட்டார். இவர் ஆசிரியராகவும் கடமையாற்றி வந்தார்.

இவரைத் தொடரந்து திரு மு .இராமசாமி அதிபரானார்.

கல்லூரியில் கற்ற அனைவர்களும் 4 இல்லங்களாகப பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றியமையை ஞாபகத்தில் கொள்வாராயின் சிற்றம்பலம், சின்னத்தம்பி, கிருஷ்ணபிள்ளை, ராமசாமி என்ற இல்லப் பெயர்கள் மீண்டும் நினைவு கூறமுடியும்.

1928இல் திரு K.P அச்சுதன்பிள்ளையும், 1943இல் திரு K.G பத்மநாதபிள்ளையும் அதிபர்களாக நியமிக்கப்பட்டனர்.

ஏறக்குறைய 800யார் தூரத்திலுள்ள திரு ளு.மு இராஜசிங்கம் அவர்கள் வீட்டில் இருந்து கையினால் இயங்கும் பம்பிமூலம் பாடசாலக்கு முதற்குழாய் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இக்காலக்கட்டத்திலே விளையாட்டுத்துறையும் கலைத்துறையும் சிறப்புப் பெற்று பொற்காலத்திற்கான வித்திடப்பட்டது.

1949இல் திரு K. சிவப்பிரகாசம் அதிபரானார். இக்காலக்கட்டத்தில் முகாமையாளர் முதலியார் சின்னத்தம்பியின் மகன் K.C நடராஜா Bat. at.law அதிபருடன் சேர்ந்து கல்லூரியின் வளர்ச்சிககுப் பெரும் பங்காற்றினார்.

இக்கல்லூரியின் நலன்விரும்பிகளில் முன்னோடியாக திரு V கந்தப்பு (கம்பகா) ஆசிரியர்கள் (பழைய மாணவர்களும் கூட) A சுப்பிரமணியம், A கனகசபை, I சிற்றம்பலம் ஆகியோர் கல்லூரியின் கட்டட வளர்ச்சிகளில் பெரும் பங்காற்றினார்கள்.

கல்லூரிக்கான அக்கால நீர்விநியோக ஏற்பாட்டை K.C நடராஜா, I சிற்றம்பலம் செய்திருந்தனர். தற்போதுள்ள இரும்பு Gateஐ உப அதிபர் திரு. சிவசிதம்பரநாதனும், வளைவாக வடிவமைக்கப்பட்ட கல்லூரியின் பெயரை தகடுகளில் பொறித்தவர் பழைய மாணவன், நீண்டகால ஆசிரியர், உபஅதிபர், அதிபர் திரு A சுப்பிரமணியம்.

1964ல் திரு சோமசுந்தரம் அதிபரானார். இவர் காலத்திலேயே பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் தெரிவாக ஆரம்பித்தனர். முதல் மாணவன் திரு. C. கதிர்காமநாதன். தொடர்ந்து திரு V.S குணசிங்கராஜா (விரிவுரையாளர்) திரு V.S. சுவாமிநாதன் (திட்டமிடல் பணிப்பாளர்) பல்கலைக்கழகம் சென்றனர்.

1971ல் பண்டிதர் பொன் கணேசன் அதிபரானார். (இவர் பழைய மாணவனும் ஆசிரியருமாவார்). இவர் காலத்திலேயே, அருகே இருந்த பாலர்பாடசாலை ஆரம்பபக்கல்விப் பாடசாலை மூடப்பட்டு கல்லூரியிலேயே பாலர் முதல் உயர்தரம் வரை கற்கும் வசதியும், பாடசாலை கீதம்

திரு. V .கந்தப்பு (மன்னவன்) ஆசிரியரால் பாடவும் பெற்றது. அதுமட்டுமன்றி சங்கீத ஆசிரியையாக இருந்த அன்றைய பாரதா மனோரஞ்சிதம் (இன்றைய திருமதி பாரதா சொரணராஜசிங்கம்) திரு. S. நமசிவாயம் பாடலுக்கு இசையமைத்தனர்.

1976ல் திரு.வி.தங்கராசாவும், 1977ல் திரு T. நமசிவாயமும், 1979ல் திரு A. சுப்பிரமணியமும் அதிபர்களாக குறுகிய காலங்கள் கடமை ஆற்றினர்.

அதிபர் திரு சுப்பிரமணியம் பற்றி சற்று விரிவாகவே நாம் பார்க்க வேண்டும். இவர் கரணவாய் வடக்கு நவிண்டிலைச் சேர்ந்தவர். 1941 முதல் 48 வரை இக்கல்லூரியின் மாணவனாகவும், 1952 முதல் 1978 வரை ஆசிரியராகவும் 1979 முதல் 1980 வரை அதிபராகவும் 1980 முதல் இளைப்பாறும் வரை உப அதிபராகவும் கடமையாற்றினார். இவரிடம் நான் கல்வி கற்ற காலம் ஒரு சில மாதங்களே. இருப்பினும் அவரோடு பழகிய காலமும், அவரைப்பற்றி மற்றவர் சொல்லக் கேள்விப்பட்டதும் அதிகம். எல்லோராலும் .Artist Master / Sri என அழைக்கப்பட்டவர். மிகவும் கடுமையானவர், கடுகடுப்பானவர் என்பார்கள். எமக்குத் தகுந்த வகையில் அவர் கடுமையாகவும் கடுகடுப்பாகவும் நடந்திருப்பார் என்றே நான் நம்புகின்றேன். இவர் செல்வி பாக்கியம் என்பவரை திருமணம் முடித்தார். அவர் மலேசியாவில் கல்வி கற்றவர் என்று நம்புகின்றேன். அவரும் இக்கல்லாரியில் நீண்டகாலம் கல்விகற்பிக்கும் ஆசிரியர் என்றால் மிகையாகாது. எனக்கும் அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. இன்று அவர் கற்பித்த ஆங்கிலமே இந்நாட்டில் நான் சிறப்புற ஆங்கிலம் எழுதுவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறது. Artist Sri இன் மறைவைத் தொடரந்து இன்று அவர் இங்கிலாந்தில் வசித்து வருகிறார். Artist Master சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகவும், பாக்கியம் ஆசிரியை 25 ஆண்டுகளுக்கு மேலாகவும் இக்கல்லூரியுடன் இணைந்திருந்தார்கள்.

தனக்கே கிடைக்கக் கூடிய அதிபர் பதவியைப் பெரிதும் விரும்பவில்லை. இதனால் இவரும், அவருடன் சார்ந்த திரு. கந்தப்பு, திரு மாணிக்கம் மற்றும் இளைப்பாறிய திரு. செல்லையா ஆசிரியர் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திரு சிவபாதசுந்தரம் அவர்களை அணுகி அவரையே அதிபராக்க விரும்பினர். அவ்வேளையில் விலங்கியல் பாடத்துறையில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார். அவர் ஸ்கந்தவரோயக் கல்லூரியிலும், ஹாட்லிக் கல்லூரியிலும் கற்பித்தல் துறையையும், அலுவலக நிர்வாகத்துறையை திரு. ஒரேட்டர் சுப்பிரமணியம், திரு. தாமோதரம், திரு. சாமுவேல் போன்ற அதிபர்களிடமிருந்தும் கற்றுத்தேறி

தொண்டமனாறு வெளிக்கள நிலைய பணிப்பாளராவும் பணியாற்றிக் கொண்டிருந்தார். சகலரது வேண்டுகோளையும் ஏற்று விக்கினேஸ்வராக் கல்லூரியின் அதிபராக 1980ம் ஆண்டில் நடுப்பகுதியில் பதவியேற்றார். இவர் 1992ம் ஆண்டு வரை 12 ஆண்டுகள் அதிபராகக் கொத்தனியதிபராகவும் கடமையாற்றினார்.

திரு சிவபாதசுந்தரம் அவர்கள் காலத்தில் பல முன்னேற்றங்கள் கட்டட ரீதியிலும் சரி, கல்வித்துறையிலும் சரி, விளையாட்டுத்துறையிலும் சரி, கலைத்துறையிலும் சரி கல்லூரி வளர்ச்சி துரிதமாக படிகளைத் தாண்டிப் பறந்தது.

அந்நாளைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. து. ராஜலிங்கம் அவர்களது உதவியுடன் கட்டங்களும் Goba Mills திரு. பாலசுப்பிரமணியத்துடன் ஆன தாராள நிதி வழங்கலினாலும் திருமதி. நா. ஆழ்வாப்பிள்ளை அவர்களின் நன்கொடையினால் கிடைத்த வயற்காணியில் நன்னீர் கிணறும் திரு. சபாநாயகம் ஆசிரியரது உடலுழைப்புடனான குழாயமைப்பும் நன்னீரினையும் பாடசாலைக்குக் கொணர்ந்தது.

மேலும் KKS என அழைக்கப்படும் S. கனகசபை அவர்களதும், ஜெயக்கொடி குடும்பத்தினர், N.S. சின்னத்தம்பி ஆசிரியர் குடும்பத்தினரின் பண, நில பங்களிப்பின் மூலம் இன்றைய விஸ்தீரண மைதானமும் "MR"என அழைக்கப்பட்ட முருகேசு ராஜதுரையின் பணவுதவி மூலம் கல்லூரிக்கான மினசாரமும் பெறப்பட்டது. இங்கு குறிப்பிட்ட Goba Mills, Bala, KKSD, MR ஆகியோர் அதிபர் திரு சிவபாதசுந்தரத்தின் நெருங்கிய நண்பர்கள். கேட்டதை மறுக்காது செய்தார்கள். மேலும் தான் நினைத்ததை சாதிக்கக் கூடிய வல்லமையும் திரு. சிவபாதசுந்தரம் அவர்களிடமிருந்தது.

(நான் நம்புகின்றேன்) 1986ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு பெரும் கலை விழா ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்காக பலரும் அயராது உழைத்தனர். திருமதி மனோன்மணி நடராஜா, திருமதி. (இன்று) சரோஜினிதேவி, திருமதி. மகேஸ்வரி சுவாமிநாதர், திரு. ஜெயரட்னம், திரு. யோகராஜா, திரு. தர்மலிங்கம், மற்றும் மாணவ மணிகள் அடங்குவர். இவ்விழாவிற்கான நுழைவுச்சீட்டுக்கள் Rs. 1 இலிருந்து Rs. 500 வரையாகும். தெரிவுசெய்யப்பட்ட பலருக்கு Rs. 500 சீட்டு விற்கப்பட்டது. தனது வீட்டிற்கு விற்பதற்கு திரு. கர்ணன் என்பவரை அதிபர் அனுப்பினார். மிகவும் தந்திரோதயமான ஒரு உக்தி. தான் கேட்டால் கிடைக்காது. தானும் வாங்கக்கூடாது. இப்படி ஒரு மாணவன் சென்றால் மரியாதைக்காகவேனும் வாங்கப்படும் என்பதே உட்கருத்து. சித்தியும்

பெற்றார். அதே போல எனது வகுப்பிலேயே கற்றுவரும் ஒரு மாணவி வீட்டுக்குச் சென்று இதை விற்றுவா என்று என்னை அனுப்பினார். நானும் சென்றேன். மாணவியின் தாயார்தான் திறந்தார். ரிக்கெற்றை நீட்டினேன். "இப்போதுதான் இன்னொருவர் வந்தார் என்றார்" எனக்குத் தெரியாது அதிபர் கொடுத்துவிட்டு காசுடன் வருமாறு கூறினார் என்றபடி Rs 500 றிக்கற்றை மீண்டும் நீட்டினேன். ஒன்றும் பேசாது உள்ளே சென்றுவிட்டார். மகள் வந்து யார் எனப் பார்த்துவிட்டு வந்த வேகத்திலேயே உள்ளே சென்று விடடார். தாயார் பணத்தோடு வந்துவிட்டு அதிபருக்கு நீர் யார்? என்றார். நானும் பிடிகொடுக்காது "ஏன்" என்றேன். "வலு கெட்டியான அதிபர், மகனை விட்டு விற்றுவிட்டார்" என்றார். நான் சிரிப்போடு வந்து அதிபரிடம் கூற அவரும், வேறு யார் சென்றிருந்தாருலும் விற்றிருக்க முடியாது. அதனால்தான் உன்னை நேரம் பார்த்து அனுப்பினேன் என்றார். இவ்வாறு சமயோசிதமாக அவர் நடந்து வெற்றிகளைச் சாதித்தது எத்தனையோ – எழுத்திலடங்கா-

இவர்காலத்தில் ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்தது. மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு கால்தடம் பதித்தனர். அவ்வாறானவர்களில் P. பிறேம்குமார், N. வாகீசன், M. ரவீந்திரன், N. தயாபரன், P. சிவசுதன், K. விஜயராணி, N. மதிவதனி, K. வசந்தி, K. சண்முகநாதன், B. அஞ்சலிக்கா, S. கிரிதரன், K.V. ராஜ்குமார், V. சண்முகநாதன், P. சிவைகுகன், M. முரளிதரன், S. செல்வரதி என பலர் தொடர்ந்தனர்.

இவரைத் தொடர்ந்து திரு. சிதம்பரநாதன், திரு. செல்வராஜா, திரு. அம்பலவாணர், திரு. செல்வராஜா போன்றோர் அதிபர்களாகி இன்று திரு. சிவசிதம்பரம் அதிபராக கடமையாற்றி வருகிறார்.

மேலே குறிப்பிட்ட செல்வி மதிவதனி (இன்று திருமதி சிவராஜா) 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரை அக்கல்லூரியிலேயே கற்றுத் தேர்ந்தவர். பெருமைக்குரியவர். அவரது தந்தையார் திரு. நல்லதம்பி ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரராக கல்லூரியில் கற்பித்தவர்.

எனது நினைவில் நிற்கும் அந்நாள் ஆசிரியர்கள்:

திருமதி. ரத்தினம் கணபதிப்பிள்ளை, திருமதி. ரதிதேவி ஜோதிரவி (தற்போது லண்டனில் இருப்பதாகக் கேள்வி, இன்றுவரை நான் பார்க்கவில்லை), திரு K.S. சிதம்பரநாதன் (ஓய்வின் பின்னர் நாடாளுமன்றத்திற்காக போட்டி போட்டார் என்று அறிகிறேன்) Artist Sri (காலமாக முன்னர் இருதடவை சந்தித்தேன்) திருமதி பாக்கியம்

சரவணமுத்து (இன்று லண்டனில் இருக்கின்றார் - அக்கால பன்னவேலை ஆசிரியர்), திருமதி பாக்கியம் சுப்பிரமணியம் (லண்டனில் இருக்கின்றார்), திருமதி வள்ளியம்மை இராசையா, திருமதி. பாரதா சொர்ணராஜசிங்கம் (அன்றைய செல்வி மனோரஞ்சிதம்), திரு. V. தங்கராசா, திரு. V. தில்லையம்பலம் (கொழும்பில் இருக்கின்றார் என நம்புகின்றேன், அவரது மகளை அவ்வப்போது கோவிலில சந்திப்பதுண்டு – மகன் பகீரதனும் பல்கலைக்கழகம் புகுந்தவர்களில் ஒருவர்), திருமதி மகேஸ்வரி சுவாமிநாதன், திருமதி. ராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் (இன்றைய இங்கிலாந்து பழைய மாணவரின் அடிக்கல், இன்றும் கம்பீரமுடன் அன்று ஆணையிட்டது போல இன்றும் ஆணையிட்ட வண்ணம் நிமிர்ந்து நிற்கிறரர்), திருமதி பரமேஸ்வரன் (இன்று தனது புதல்வர்கள் சிவசுதன், சிவதர்மன் இருவரும் பல்கலைக்கழகம் புகுந்தவர்கள், ஆகியோருடன் லண்டனில் இருக்கின்றார்) திரு K. சபாநாயகம், திரு. ஜெயரட்னம் (எனக்குத் தெரிந்த அதிபராக இருதயக் கல்லூரியில் இருந்தார்), திரு. சிவபாதம் (ஆசிரியராக இருக்கும் போதே இறையடி சேர்ந்தார்), திரு. வீரகத்தி, திரு. ஸ்ரீரங்கநாதன் (இருவரும் இறந்துவிட்டதாக அறிகிறேன்), திரு. நவரட்னம், திரு. நல்லதம்பி, திரு. நமசிவாயக்குருக்கள் (காலமாகிவிட்டதாக அறிகிறேன்), திரு. செல்வராஜா (உபஅதிபர், அதிபர்) திரு. நவரட்னம், திரு. சங்கரப்பிள்ளை, திரு. ஈஸ்வரநாதன், திரு. கணேசமூர்த்தி (அரசடி பாடசாலை அதிபராகப் பார்த்தேன்)

மேலும் பல ஆசிரியர்கள் வந்தார்கள் தங்கள் புகழ் பாடசாலைக்குச் சேர உழைத்தார்கள். ஆசிரியர்களாக மட்டுமன்றி பல துறைகளுக்கு தங்கள் முழுமனதுடனான உதவிகளைத் தந்தார்கள். திரு. வேதாபரணம் முக்கியமானவர். உதைபந்து போட்டிகளில் கல்லூரி புகழ்பாட பல வழிகளிலும் உறுதுணையாக இருந்தார். பின்னாளில் தர்மேந்திரா உதவியதாக அறகிறேன். எனது காலத்தில் தர்மேந்திரா அடிக்கும் ஒவ்வொரு அடியும் எல்லோர் மனங்களையும் கவரும். DIAMOND FOOTBALL CLUB என்றால் ஞாபகம் வருவது தர்மேந்திராவே.

கல்லூரியும் அதன் வரலாறும் என நான் கண்டவை, அனுபவித்தவை என்று எழுதிக் கொண்டு சென்றால் எவ்வளவோ சம்பவங்கள் மறக்க முடியாதவை என எழுதிக் கொள்ளலாம். இவற்றையெல்லாம் ஒரு மலரில் போட்டால் அது எனது மலராகிவிடும். எனவே இங்கேயே நிறுத்துகிறேன்.

**ரஜீவ் சிவபாதசுந்தரம்** (பழைய மாணவன்)

# மனக்கதவை மெல்லத்தட்டி

அந்தப் பச்சைப்பசேல் எனும் நெற்பயிர்கள் காற்றுக்கு என்னமாய் அசைகின்றன நுகவில் பெண் பச்சைச்சேலை உடுத்தி இருப்பது போல என்ன அழகு அதனிடையே கம்பீரமாய் மிடுக்கோடு நிற்கும் தண்ணீர் தாங்கிகள் இவற்றையெல்லாம் பார்த்து அதிசயித்து நிற்கிறாள்போலும் எங்கள் தாய். எத்தனை வருடங்களாக எம்மை சுமக்கிறாள், சுமந்தாள்.

அந்த வீதியின் ஒரு ஓரத்தில் நின்று பார்க்கின்றேன். அதோ அந்த உபவாசல் கரையில் நிற்கும் தென்னைமரம் விடுப்புப் பார்ப்பதுபோல மதிலின் மேலால் அசைந்து அசைந்து காற்றுக்கு என்னமாய் ஆடுகிறது. அது விடுப்புப் பார்க்கிறதா அல்லது அந்த வெளியே நிமிர்ந்து ஆணவமாய் நிற்கின்ற அந்த நீர்த்தாங்கிகளுக்கு ஏதோ சொல்ல முற்படுகின்றதா "ஆணவம் கொண்டவர்கள் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை" என்ற உண்மையை சொல்ல முற்படுகிறதா இன்றுவரை புரியாத புதிராகவே உள்ளது. பிரதான வாசலில் உயர்ந்து நிற்க்கும் வேப்பமரமும் ஒரு உண்மையைச் சொல்கிறது.

"நீ வாழ்ந்தால் மட்டும் போதாது மற்றவர்களுக்கும் உன்னால் ஆனதைச் செய்" என்று தன்னால் ஆன எத்தனை உதவிகளை இந்த மானிடர்கதுச் செய்கிறது. இறுதியில் தன்னையே எங்களுக்குத் தந்து விடுகிறது. எங்களில் எத்தனைபேர் இப்படி வாழ்கிறோம். நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்குள்ளேயே கேட்கவேண்டிய கேள்விகள் பல "எதைக் கொண்டு வந்தோம் கொண்டு செல்வதற்கு" என்று பகவத் கீதையிலே கண்ணன் சொன்னானே நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவிட வேண்டுமே இதைத்தானே இந்துத்துவம் சொல்கிறது. இப்படியே என் சிந்தனைகள் மேலோங்க அதைக் குழப்புவதுப்போல ஸ்கூட்டர் சத்தம். யார் இவர் எங்கே போகிறார். ஆம் இவர்தான் எங்கள் கல்லூரிக்குப் புதிதாக வந்த அதிபர் சிவபாதசுந்தரம். காட்லி கல்லூரியில் ஆசானாகவும் விலங்கியல் பாடத்திற்கு தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் இருந்தவர், இல்லை கொடிகட்டி பறந்தவர்.

இவர் வருவதற்கு முன்பு எல்லாவீடுகளிலும் மின்சாரம் இருந்தது. அறியாமை இருளைப்போக்கும் எங்கள் தாய் இருட்டிலே மூழ்கி முனகிக்கொண்டிருந்தாள். தண்ணீர் குடிப்பதற்காய் நீண்ட வரிசையிலே ஆண்கள், பெண்களென காத்துக் கிடந்தோம். விளையாட்டுப் போட்டிகள் எங்கடை வளவுக்குள்தான் நடந்தது. ஏன் நான் வளவு என்று சொல்கிறேன் என்றால் அது மைதானமாக விஸ்தீரணம் பெறவில்லை. இப்படியாக நாங்கள் கண்டுகொண்டிருந்த கம்பலைக் கனவுகளை, கஞ்சிக்கனவுகளை எங்கள் தாயின் பரிதாப நிலையைக் கண்டு மனம் துடித்தார். தான் கல்வி கற்பித்த அந்தக் காட்லிக் கல்லூரியைப்போல அல்லது அதைவிட மேலாக்க வேண்டுமென்று நினைத்தார். எங்கள் கனவுகளை மின்சாரக் கனவாக்க நினைத்தார். புராணகாலத்துக் கதை பசியால் வாடிய பன்றிக்குட்டிக்கு சிவபெருமான் தாய்பன்றியாக வந்து பாலூட்டினார் என்பது நம்பிக்கை. இன்று சிவம் தண்ணீர்

தாகத்தால் வாடிய எத்தனை இளசுகளின் தாகத்தைத் தீர்த்தார். இருளகற்றும் விளக்கு இருண்டுபோய் இருந்தால் எப்படி ஒளிபெற முடியும். தான் ஒளிபெற்றால்தானே தன்னைச் சூழ உள்ளவர்களையும் அரவணைக்க முடியும். தாய்க்கு விளக்கேற்றினார். எத்தனை காலம்தான் வளவுக்குள் விளையாட முடியும் மைதானத்தை கொடுத்தார். இப்படியாக எல்லா வகையிலும் எங்கள் பாட சாலையை முன்னேற்றினார். ஒரு சில நூறு மாணவர்களோடு இருந்தவள் இன்று பல நூறு மாணவர்களை தன்னகத்தே கொண்டாள் இத்தனை பெருமைக்கும் காரணமான எங்கள் அதிபர் அயற் பாடசாலை ஒன்றில் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கும்போதே இறைவனடி சேர்ந்தார், இல்லை எங்கள் இதயங்களில் குடிபுகுந்தார்.

இப்படியே இன்பத்தில் இருந்து துயரத்தில் மூழ்கும்போது மீண்டும் என்னை குழப்புகிறது. அந்தக் காரின் இரைச்சல் என் கைக்கடிகாரத்தில் நேரத்தை பார்க்கின்றேன். சரியாக 8.10. பாடசாலை ஆரம்பம் 8.20. என்றும் 10 நிமிடம் முன்னதாகவே அந்த கார் வந்துவிடும் தமிழரின் தேசிய உடையில் கம்பீரமாக கறுத்தக் கண்ணாடி போட்டுக்கொண்டு வருவார். சிலர் சொல்லுவார்கள் இவர் சிரித்து நாங்கள் பார்த்தது இல்லை என்று. ஆனால் நான் பலதடவை பார்த்திருக்கின்றேன். இவரிடம் இருந்த நகைச்சுவை உணர்வுகளை கண்டு வியந்திருக்கிறேன். அவர்தான் "ஆட்டிஸ்சேர்" என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு சுப்பிரமணியம் அவர்கள் இவருக்கும் இந்த கல்லூரிக்கும் என்ன சம்பந்தம் யாருக்குமே கிடைக்காத பெரிய வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. மாணவனாய், ஆசானாய், உபஅதிபராய், அதிபராய், தொண்டனாய் என்று பல்வேறு முகங்கள் இவருக்குண்டு இவரது முயற்சியினால்தான் அதிபர் சிவபாதசுந்தரமே எங்கள் கல்லூரிக்கு அதிபராக வந்தார். ஆட்டிஸ்சேர் நினைத்திருந்தால் தானே அதிபராக நீடித்திருக்க முடியும். ஆனர் அவர் பதவிமேல் ஆசைகொள்ளவில்லை மாறாக கல்லூரி வளரவேண்டுமென்று ஆசைப்பட்டார். என்றுமே தூய்மையான வெள்ளை உடையையே விரும்பி அணியும் அவரது மனமும் தூய்மையானதும், நேர்மையானதும். பாடசாலை வளர்ச்சியிலே ஒரு சேவகனாக ஒரு தொண்டனாக இவரது கடமைகள் அளப்பரியது இவரைப்பற்றி இன்னும் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். ஒருமுறை பாடமெடுத்துக் கொண்டிருக்கும்போது முதல்நாள் வகுப்புக்கு வராத மாணவனை வராமைக்கான காரணம் என்னவென்று கேட்டார். அவன் சொன்னான் அம்மா களைபிடுங்க போய்விட்டார் நான் சமைத்தேன். என்ன கறிவைத்தாய் ஆட்டிஸ்சேர் கேட்டார். அதற்கு அவனும் முருங்கைக்காய் கறி... என்று இழுக்க நிறுத்து முருங்கைக்காய் கறிக்கு என்ன புளிவிட்டாய் அவனும் பழப்புளி என்று சடாரென சொல்ல ஆட்டிஸ்சேர் சொன்னார் எனக்கு பொய் சொல்ல வேண்டாம் முருங்கைக்காய் கறிக்கு புளிவிடுவதில்லை என்று சொல்ல எங்களுக்கும் அன்றுதான் அந்த உண்மை புரிந்தது. அவனும் தான் சொன்ன பொய்யை ஒப்புக்கொண்டான். இப்படியாக அவரிடம் இருந்த பல குணஇயல்புகளை கண்டு வியந்திருக்கிறேன்.

இவையெல்லாம் என் மனப்பதிவில் பதிந்தவை இன்றும் நினைக்க நினைக்க இனிமையாகவே இருக்கின்றது. இன்று இருபது ஆண்டுகள் கழிந்து இங்கு லண்டனில் எங்கள் கல்லூரிக்காக ஒரு பழைய மாணவர் சங்கம் அமைத்து, அதனை கம்பீரமாக நிமிர்ந்து நிற்க செய்த பெருமை. எங்கள் கல்லூரியின் ஆசிரியை திருமதி. இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் அவர்களுக்கே உரித்தாகும். எங்களை தொலைபேசியில் துரத்தித் துரத்தியே சாதித்துவிடுவார். நான் நினைக்கின்றேன் எங்களுக்கு படிப்பிக்கும்போதுகூட இவர் இப்படி சிரமப்பட்டிருக்கமாட்டார். பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கணவன் என்ற குறுகிய வட்டத்துக்குள் வாழாது தான் வாழும் வாழ்ந்த சமூகத்துக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று துடிப்பவர், செய்தும் வருகிறார். இவரைப்போலவே திரு. லீலாரெத்தினம் ஆசிரியரும் இவரோடு சேர்ந்து தன்னாலான பணிகளை செய்து வருகிறார். இவர்கள் வாழும்போதே பாராட்டப்படவேண்டியவர்கள் என்பது எனது விருப்பு.

எனது மனதுக்குள் சில நெருடல்களும் இருக்கின்றன. இன்று எங்கள் பாடசாலையில் கல்விகற்கின்ற மாணவர்கள். எத்தனைபோருக்கு முன்னாள் அதிபர்கள் பாடசாலைக்காக ஆற்றிய பணிபற்றித் தெரிந்திருக்கின்றது என்றால் மிகவும் வேதனையளிக்கின்றது. சில மாணவர்கள் பாடசாலைபற்றி எழுதிய கட்டுரையை வாசித்தபோது எங்கள் கல்லூரியின் வளர்ச்சி பற்றியும் இந்த கல்லூரியை தூக்கி நிறுத்திய தூண்களாக இருக்கக்கூடிய அதிபர், உபஅதிபர், ஆசிரியப்பெருந்தகைகள் போன்றவர்களது அர்ப்பணிப்புக்கள் தெரிந்திருக்கவில்லை அல்லது மாணவர்கள்முன் கொண்டு செல்லப்படவில்லை என்பது வருந்தத்தக்க விடயங்கள் இந்த புலம்பெயர் வாழ்வில் இத்தனை இடர்களுக்கு மத்தியிலும் இராஜேஸ்வரி டீச்சர், லீலா ரெத்தினம் சேர் போன்றவர்கள் செய்து வருகின்ற தன்னலம் கருதாத உழைப்புக்கள் மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும். அப்போதுதான் இன்னும் இன்னும் புதியவர்கள் பாடசாலைக்காக உழைக்க முன்வருவார்கள். அதைவிடுத்து ''காலத்தால் செய்த உதவி ஞாலத்தில் மாளப் பெரிது'' என்று சொல்லுவார்களே அதை மறந்து நாங்கள் கல்லூரியை தூக்கி நிமிர்த்திய தூண்களை மறக்கலாமா என்றுமே நினைத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய கல்லூரியின் அதிபராக இருக்கக்கூடிய திருசிவசிதம்பரம் அவர்களுக்கு அடியேனின் வேண்டுகோள் அதிபர் சிவபாதசுந்தரம் அவர்கள் இருந்தபோது தனக்கு முன்னால் இருந்த அதிபர்கள் ஆசிரியர்கள் என்ன செய்தார்கள் என்பதை மாணவர்கள் மத்தியிலே கூறி அவர்களைக் கௌரவித்தார். அதே பாணியில் நீங்களும் செய்யவேண்டும் அப்போதுதான் நாளை நீங்களும் வரலாற்றில் இடம்பெறுவீர்கள் அப்போதுதான் நீங்கள் ஆற்றிவரும் மகத்தான பணியும் நாளை பதிவுசெய்யப்படும்.

வாழ்க தமிழ்! வளர்க எம் கலைக்கல்லூரி!

**- இந்துமதி கர்ணன் -**

# கரவைப் பெண்கள்

ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் என்ற முதுமொழிக்கிணங்க, பெண்களினால்தான் மனிதனோ குடும்பமோ அல்லது சமுதாயமோ உயர்நிலை அடைகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது நமது கரவெட்டியாகும். சமூகப் பண்பாட்டினாலும் சமயக் கட்டுப்பாட்டினாலும் இறுகப் பிணைக்கப்பட்ட சமூகமாக இன்றும் திகழ்கின்றது. கடின உழைப்பாலும் கல்வியினாலும் உயர்நிலையடைந்து இன்று உலகம் முழுவதும் கரவெட்டியின் புகழ் பரப்பி நிற்போர் பல ஆயிரம் பேராகும். இதற்கு முதுகெலும்பாக இருப்பவர்கள் அன்னையரே. "ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவன்" என்பது பழமொழி. ஆனால் கரவைத்தாயின் மடியில் ஐந்துக்கு மேற்பட்ட பெண்களுள்ள குடும்பங்கள் பலவுள்ளன. அக்குடும்பங்களில் ஒரு குடும்பம் எங்களுடையது. ஒரு ஆண்மகன் தமது இறுதிக்காலக் கடமைகளை செய்ய வேண்டும் என்பதற்காக தொடர்ந்து ஏழு பெண்களைப் பெற்று தமது நோக்கில் 3 ஆண்களைப் பெற்று வெற்றி கண்டனர் எமது பெற்றோர். அந்த வெற்றியை நீண்ட காலம் அனுபவிக்க முடியாமல் எமது தந்தையார் ஐம்பது வயதில் காலமானார். ஆனாலும் எமது தாய் மனந்தளராது தந்தையின் கனவுகளை நனவாக்கி நிறைவு கண்டவர் எமது அன்னை. சாதாரண ஆசிரியராக இருந்தும் தனது கடின உழைப்பினால் தன் பிள்ளைகளை கல்வியினால் உயர்நிலைக்கு உயர வைத்தார் என்றால் மிகையாகாது. இன்று எமது குடும்பத்தில் ஆசிரியர் வழக்கறிஞர், வைத்தியர், பொறியியலாளர் என்று பலதுறைகளிலும் தனது உழைப்பின் பயனை நிலைநாட்டியுள்ளார்.

எமது தந்தையாரின் மாமனார் குடும்பமும் ஐந்து பெண்களையும் இரு ஆண்களையும் உள்ளடக்கிய குடும்பமாகும். V.K. சிற்றம்பலம் முதல் இலங்கையில் தபால் இலாகாவில் மகாஅதிபதியாக இருந்தார். அவர் தனது பெண்களையும் கல்வியினால் உயர்த்திக் கரவெட்டி

மக்களுக்கு முன் மாதிரியாக இருந்தார் என்றே கூறலாம். மூத்தமகன் பெயர் பெற்ற "சிரித்திரன்" ஆசிரியர் சிவஞானசுந்தரம் சிரிக்க வைத்தவர். இரண்டாவது மகள் திருமதி சுந்தரேஸ்வரி முத்துத்தம்பி தனது ஞானத்தால் உயர்ந்து நின்றவர். அவர் எனக்கொரு முன்மாதிரியாக திகழ்ந்தவர் மட்டுமல்லாது. எனது கல்வியை வடஇந்துமகளிர் கல்லூரியில் கல்வி கற்றுப் பெருமைப்பட வைத்த ஒரு தெய்வம் என்றே கூறலாம்.

திருமதி சிவலோக சுந்தரி சுப்பிரமணியம் ஆசிரியை 3வது மகள் திருமதி யோகேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் காங்கேசன்துறை சிமேந்து தொழிற்சாலையில் இரசாயனவியளாராக இருந்து பலருக்கும் தொழில் வாய்ப்புக் கிடைப்பதற்கு உதவினார். திருமதிகள் புஸ்பாதேவி தங்கராசா திலகவதி செல்வ குலசிங்கம் இருவரும் ஆசிரியராகப் பணியாற்றினார்கள். அந்தக் காலத்திலேயே பெண்களின் கல்விக்காக பாடுபட்டார்கள் என்பதற்கு இக்குடும்பம் எடுத்துக்காட்டாகும்.

அடுத்து பெண்கள் கூடிய குடும்பம் செல்லத்துரை ஆசிரியரின் குடும்பமாகும். பெண்கள் அனைவரையும் படிக்க வைத்துப் பெருமைப்பட்ட குடும்பமாகும். அம்பிகா பொறியியலாளராக திருகோண மலையில் வேலை செய்கின்றார். அடுத்து மல்லிகா... சித்திரா இருவரும் பட்டதாரிகளாக தொண்டாற்றி வருகின்றனர். மல்லிகா கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கிப் பாடசாலையின் பெயரை உயர்த்தினார் எனலாம்.

விக்கினேஸ்வராக் கல்லூரியின் மறைந்த நல்லதம்பி ஆசிரியரின் குடும்பத்தைக் கூறலாம். இந்துமதி சுந்தரலிங்கம் வைத்தியத்துறையிலும் கமலாவதி ராஜரட்ணம், கிருபாவதி நந்தகுமார் ஆசிரியைகளாகவும் இருக்கின்றனர்.

மறைந்த கந்தப்பு அவர்களின் குடும்பத்திலிருந்து வசந்தராணி... மனோராணி பொறியியலாளராகவும் விஜயராணி வைத்தியராகவும் வெளிவந்து தொண்டாற்றுகின்றனர்.

திரு. தெய்வ சிகாமணியின் குடும்பத்திலிருந்து சிறீவதனா பாலேந்திரன் சிறீவனிதா எக்கவுண்டனாகவும் சிறீவத்சலா தெய்வசிகாமணி பொறியிலாளராகவும் பணிபுரிகின்றனர்.

ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்த ஆறுமுகம் ஆசிரியரின் குடும்பத்திலிருந்து தவமணிதேவி எக்கவுண்டனாகவும், லோகேஸ்வரி..... மங்கஎேஸ்வரி... இருவரும் பொறியியளராகவும் வெளிவந்தனர்.

திரு. அம்பிகாவரன் ஆசிரியரின் குடும்பத்திலும் பெண்கள் கல்விகற்று தமது குடும்பப் பெருமையை கனடாவில் பரப்பிக்கொண்டிருக்கின்றனர். சீதா பிரியதர்சினி ராம் Msc., சிவாபவாணி ராஜிவ் BA, சிவப்பிரியா அம்பிகாவரன் BA.Hons. கந்தப்பு புவனேஸ்வரி தம்பதிகளின் புதல்விகள் சாந்தினி திருப்பதி DR கமலினி Eng. தவராணி DR. ஆகவும் வேலை செய்கிறார்கள். மறைந்த தம்பி ஐயன் குடும்பத்திலிருந்து சுசிலா நவரட்ணம் ஆசிரியையாகவும் மினா வைத்தியராகவும் வதனா ஆசிரியையாகவும் வெளிவந்தனர்.

மறைந்த அமரர் A.S. சின்னத்தம்பி ஆசிரியர் குறிப்பிட்டது போன்று "ஏனைய பிரதேசங்களில் ஆண்களுக்கொரு பாடசாலையும் பெண்களுக்கொரு பாடசாலையும் என்று வேறுவேறாகப் பிரித்துப் பாடசாலைகளை உருவாக்கினார்கள். ஆனால் கரவெட்டியில்தான் ஆண்களும் பெண்களும் இணைந்து ஆங்கிலக் கல்வியைப் பெறக்கூடிய விதத்தில் 1917ல் விக்கினேஸ்வராக் கல்லூரி உருவாகியது என்று" கூறினார். உண்மையில் பெருமைப்படக்கூடியதும் போற்றப்பட வேண்டியதும் ஆகும். இப்பாடசாலையை உருவாக்கிய அமரர் சித்தமணியம் அவர்கள் இந்தப் பாடசாலையுடன் நின்றுவிடாது, ஆண்பாடசாலை என்று மாணிக்க வாசக வித்தியாலயமும் பெண்பாடசாலை என்று சரஸ்வதி வித்தியாலயமும் விநாயக வித்தியாலயமும், ஐயர் பாடசாலை என்று ஏனைய பாடசாலைகளையும் உருவாக்கி கரவையிலுள்ள எல்லா மக்களும் கல்வியறிவுடையவராக வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் பாடசாலைகளை பராமரித்தார். அவரின் நல்லெண்ணத்தினாலும் உழைப்பினாலும் கரவையில் எந்த இடத்தில் நின்று கூப்பிட்டாதும் ஆசிரியப் பெருந்தகைகள் வெளிவந்தார்கள்.

அவருடைய குடும்பத்தில்இலங்கையிலேயே முதல் பெண் மகப் பேறு வைத்தியர் சிவக்கொழுந்து சின்னத்தம்பி அவர்கள் 1914 தொடக்க காலத்தில் இலண்டனில் வந்து கல்வி கற்று தனது புனிதப் பணியைத் தொடர்ந்தார்.

“மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் வணக்கத்துக்குரிய ஆசிரியர்கள் நிறைந்த இடம் எமது மண் என்பதில் பெருமகிழ்வு உண்டாகிறது”

இந்த ஆசிரியைகளின் முன் என் ஆரம்ப வழிகாட்டியும் மறக்க முடியாத ஆசிரியையுமாக திருமதி வெற்றிவேல் ரத்தினம் அவர்களை முதலில் நினைவுகூரவிரும்புகிறேன். அவர் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்டாலும் கரவையில் வாழ்க்கைப்ட்டதினால் கரவைக்காக தனது வாழ் நாள் முழுவதும் உழைத்தார். பெண்மைக்கும் ஆசிரியைக்கும் இலக்கணமாகத் திகழ்ந்தார். எனது இளமைக்கல்வி பெண்பாடசாலை என்ற சரஸ்வதி வித்தியாலயத்தில் தொடங்கியது. அன்று செழித்து வளர்ந்திருந்த பாடசாலை இன்று ஒளியிழந்துள்ளது. பல பண்டிதர்களையும் ஆசிரியைகளையும் உருவாக்கியதுடன் வருடாவருடம் போட்டிபோட்டு கலை நிகழ்ச்சிகளையும் நடத்திப் பெருமை கண்ட பாடசாலையாகும். அங்கு திருமதி குஞ்சரம் சிற்றம்பலம் அவர்களிடம் மண்ணில் எழுத்துப் பழகியதும் அவர்களைச் சுற்றி நின்று பாடிச் சிரித்தும் மகிழ்ந்ததும் மறக்க முடியாத அனுபவமாகும்.

திருமதி மின்னொளி சின்னக்குட்டி 1943ல் முதல் பெண் ஆசிரியயையாக விக்கினேஸ்வராவில் தனது கடமையைத் தொடங்கினார். இங்கு மட்டுமன்று எமது ஆசிரியைகள் நாட்டின் பலபாகங்களாலும் தமது ஆசிரியப் பணிகளைத் திறம்படச் செய்தனர். இவர்களில் எனக்குத் தெரிந்தவர்களின் பெயர்களை இங்கு குறிப்பிடுகிறேன். யாரையும் தவறவிட்டால் என்னை மன்னிக்கவும். அன்று ஆசிரியைகளை அக்கா என்று அழைப்பர். எனவே அப்படியே நானும் குறிப்பிடுகிறேன்.

பாறுவதி அக்கா, பத்தினி அக்கா, பொன்னாச்சி அக்கா, சேதுப்பிள்ளை அக்கா, சின்னம்மாக்கா, பாறுவதி அக்கா, ஈஸ்வரி

அக்கா, தங்கம்மா அக்கா, நாகம்மா அக்கா, பொன்னாம்மாக்கா, சின்னாச்சி அக்கா, தெய்வானை அக்கா, அற்புதம் அக்கா, மேரி அக்கா, நாகமுத்து அக்கா, சின்னப்பிள்ளை அக்கா, செல்லம்மாக்கா, தங்கம்மா அக்கா பின்வந்த காலத்தில் ரீச்சர் என்று மாறிவிட்டது. சிவகாமி ரீச்சர், திருமதி சுப்பிரமணியம் BSc, திருமதி பாலசிங்கம், திருமதி மங்க஌ேஸ்வரி, இராசசிங்கம், திருமதி ரதி ஜோதிரவி BSc, திருமதி பாக்கியம் சுப்பிரமணியம், திருமதி பரஞ்சோதி BSc, திருமதி புவனேஸ்வரி BSc, திருமதி இராஜேஸ்வரி B.A., திருமதி புவனேஸ்வரி பரமேஸ்வரன், திருமதி இரத்தினம் கணபதிப்பிள்ளை, திருமதி நல்லம்மா பொன்னம்பலம், திருமதி ஜெயதேவி, திருமதி சுசிலா நவரட்ணம், திருமதி தங்கம்மா ரத்தினம், திருமதி அரியரட்ணம், திருமதி செல்லையா, திருமதி ஆச்சி சின்னத்தம்பி, திருமதி வீரகத்தி நாகம்மா, திருமதி மனோன்மணி நடராசா, செல்வி கல்யாணி, திருமதி மகேஸ்வரி சுவாமிநாதன், திருமதி வசந்தி BSc, திருமதி சியாமளா, அஞ்சலிக்கா சோதீஸ்வரன், திருமதி கமலரதி மகாதேவன் BSc, திருமதி மனோரஞ்சிதம் MSC., திருமதி அபிராமி பார்த்திபன் BSc, திருமதி பொன் சௌந்தரி BSc, திருமதி சுனிதா நிரஞ்சன் BSc, திருமதி சோபனா தங்கராசா, திருமதி வானதி ஜெயதாசன், திருமதி குமுதா தம்பிக்கண்டு BSc, திருமதி சாரதா நகுலன் BSc, புவனா முகுந்தன் BSc, திருமதி சுகந்தி பொன்னம்பலம், திருமதி ஜானகி கோபு, திருமதி தாட்சாயினி BSc, திருமதி வைதேகி BSc, வதனா, கலா, சுந்தரலிங்கம் மனோகரி, செல்வி சோதி, திருமதி சுசிலா தணிகாசலம், உமாசாந்தி BSc, தயாமதி, துஷிதா சிவயோகன், திருமதி ராணி வாமதேவன், ஜெயந்தி BSc, சியாமளா, திருமதி மனோரஞ்சிதம் சின்னத்துரை BSc, திருமதி திரவியம் மார்க்கண்டு, மாதவன் அனுஷியா BSc, தேவமாலினி நிமலன் BSc, ஆயிலி, சாரதா, திருமதி. ஸ்ரீசிவை கணேசராசா MSc .

முதன்முதலில் கரவெட்டியிலிருந்து ஆங்கிலத்தில் முதல் பெண் பட்டதாரி இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்தவர் திருமதி பார்வதி சின்னத்தம்பியாகும். அவருடன் ஒன்று சேர்ந்து படிப்பித்த அந்த ஒரு வருடம் மறக்க முடியாத காலமாகும். கள்ள மற்ற சிரிப்பும் வெள்ளை உள்ளமும் என்றும் மறக்க முடியாதது. தனது சேவையை 1958-1976

வரை விக்கினேஸ்வராக்கல்லூரியில் தொடர்ந்து பின் யாழ்ப்பாணம் சென்று இராமகிருஷ்ணன் மிசன், சென்மேரி கல்லூரிகளில் தனது பணியைத் தொடர்ந்தார். ஆங்கிலத்தில் கல்வி கற்றாலும் தனித்தமிழில் அழகாக கதைத்து மாணவர்களின் உள்ளங்களில் இடம் பெற்றார். திருமதி சின்னத்தம்பின் உறவினரும் எனது புவியியல் ஆசிரியருமான திருமதி பர்வதபத்தினி சிவசங்கரனும் மறக்க முடியாத ஆசிரியையாகும். இரு குழந்தைகட்டு தாயாக இருந்தபோது கணவனை இழந்தார். அப்போது தளர்ந்துவிடாது அதன்பின்தான் கல்வியைத் தொடர்ந்து கற்று M.A பட்டம் பெற்று ஆசிரியையாக கடமையாற்றி பல மாணவ மாணவிகளை உயர்நிலைக்கு உயர்த்தினார். அது மட்டுமன்று பாடரீதியாகவும் உளரீதியாகவும் திறம்பட உயர்த்தவேண்டும் என்பதற்காக இலங்கையின் பல பாகங்களுக்கும் சுற்றுலாக்களை திட்டமிட்டு திறம்பட அழைத்துச் சென்றார். இன்றும் அவருடன் சென்ற இடங்கள் பாராளுமன்றம் தினகரன் பத்திரிகை அலுவலகம் கண்டி, நுவரேலியா இன்னும் பல கூறிக்கொண்டே போகலாம். பல இடங்களுக்குப் போனாலும் மாணவியாக இருந்து தோழிகளுடனும் ஆசிரியைகளுடனும் சென்ற அந்த நாட்கள் மறக்கமுடியாதவை ஆகும். இந்த இடத்தில் வடஇந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளையும் மறக்கமுடியாததாகும். வகுப்பறையில் கண்டிப்பாக இருக்கும் அதிபர் ஆசிரியைகள் வெளியில் வந்துவிட்டால் எம்முடன் சினேகிதிகள் போலவே நடந்து கொள்வார்கள். நாம் அவர்களுடன் பயமின்றிப் பழக வேண்டும் என்பதற்காகப் போலும் வருடத்தில் ஒருநாள் வலைப்பந்தாட்டம் மாணவிகளும் ஆசிரியைகளும் போட்டி போட்டு விளையாடுவார்கள். எல்லோரும் சிறந்த ஆசிரியர்கள். ஒருவரையும் மறக்கமுடியாது. ஆனாலும் எனது உயர்ச்சியில் பெரும் பங்கு வகித்தவர் திருமதி செல்வராசா (அப்போது செல்வி கந்தப்பிள்ளையாக இருந்தவர்) எனது க.பொ.த. சாதாரணம் சித்தியெய்தியவுடன் கல்விகற்றது காணும் என வீட்டில் நிற்பாட்டிய போது வீடு தேடிவந்து மேலும் படிக்க வைக்க வேண்டும் நானும் பெண்களுடன் கூடிப் பிறந்தவர், நாம் நால்வரும் இன்று நல்ல கல்விகற்று எங்களை நாமே பார்த்துக் கொள்கிறோம். உங்கள் மகள் படிக்கக் கூடியவர் வீணாக்க வேண்டாம் என்று அறிவுரை

கூறிப் படிக்க வைத்து இன்று அவருடைய வழியிலேயே சென்று ஆசிரியராகக் கடமையாற்றினேன்.

இசை நாடகத் துறையிலும் இங்குள்ள பெண்கள் முதன்மை வகித்தனர். புவனேஸ்வரி, பேரின்பம், கிளி என்று மூன்று பெண்கள் நடனங்களை அரங்கேற்றினர். எழுத்துத் துறையில் யோகா பாலச்சந்திரன் சிறப்புப் பெற்று பலராலும் பாராட்டப் பெற்றார். பெண்களுக்கான தொழில்களில் முக்கியத்துவம் வாய்தது வைத்தியத்துறையாகும். மகப்பேறு வைத்தியராக முதலில் பெருமை தேடித்தந்த DR. சிவாசின்னத்தம்பி அவர்களைத் தொடர்ந்து DR. சத்தியானந்தவல்லி தில்லைநடராசா, DR. ஜானகி பொன்னம்பலம், DR. கருணாதேவி, DR. திலகேஸ்வரி முரளிதரன், DR. ஜெயந்தி இராசையா, DR. விஜயராணி கந்தப்பு, DR. விமலா கந்தசாமி, DR. சந்திரிக்கா, DR. இந்துமதி (நல்லதம்பி), DR. நிவேதா உதயகுமார், DR. ரோகினி, DR. மீனா, DR. சாந்தினி திருப்பதி, DR. தவராணி.

வைத்தியத்துறையில் மட்டுமன்றி பொறியியலாளராகவும் நமது பெண்கள் கல்விகற்று தொழிலாற்றுகின்றனர். முதன்முதலில் தங்கம்மா இரத்தினம் தம்பதிகளின் மகள் பரஞ்சோதி பொறியியலாளராக வெளிவந்ததைத் தொடர்ந்து லோகேஸ்வரி, செல்வரதி காந்தன், கௌரி செல்லையா, அம்பிகா குலசிங்கம், அமிர்தா வாகீசன், மீனா விமல், மாலினி, ராஜினி, விஜினி, நளினி வினாயகமூர்த்தி.

சட்டத்துறையில் மகேஸ்வரி வேலாயுதம் சிறப்பாக முன்னேறி பல பொதுப் பணிகளிலும் ஈடுபட்டுத் தன் குடும்பத்தையும் ஊரையும் பெருமைப் படுத்துகிறார் எனலாம். இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் தனது பெயரை நிலைநாட்டி இருக்கிறார் என்றால் மிகையாகாது. குமுதம் பத்திரிகையில் அவரின் சேவையைப் பாராட்டி கட்டுரை வரையப்பட்டது பெருமைக்குரியதாகும்.

நிர்வாகத்துறையில் முன்னாள் அரசாங்க அதிபர்(யாழ்ப்பாணம்) திருமதி பத்தினியம்மா திலகம் போல் குறிப்பிடத்தக்கவர். அதிபர்களாக இருந்து பாடசாலைகளை திறம்பட நிர்வகித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருமதி. சிவசங்கரன் சாவகச்சேரி

இந்துக்கல்லூரியிலும், திருமதி. பொன்னம்பலம் வேம்படி மகளிர்கல்லூரியிலும் பணியாற்றினார்கள்.

கல்வியினால் மட்டுமன்றி கடின உழைப்பாலும் வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். விவசாயத்துறையிலென்ன வியாபாரத்திலென்ன பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக உழைத்தார்கள் என்றே கூறலாம். கை வைத்தியத்துறையில் கூட நமது பெண்கள் பின்நிற்கவில்லை. நாய்கடி வைத்தியம், உளுக்கு எடுத்தல் போன்றவற்றை சிறப்பாகக் கூறலாம். ஜாதகம் கணித்து எதிர்காலம் கூறுவதிலும் பெண்கள் முன்நின்றனர். அதுமட்டுமன்றி வீரத்திலும் சிறந்து விளங்கினர். போராட்டங்கள் ஒவ்வொன்றிலும் பெண்கள் அதிகளவில் பங்கெடுத்துக் கொண்டனர். இந்தியப் போர்வீரர்கள் எங்கள் பெண்களை சூ றையாட முற்பட்டபோது மிளகாய்த்தூள் வீசி விரட்டி அடித்தனர்.

இப்படி எமது பெண்களின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் எனது அறிவு சிறியது அனுபவம் பற்றாது. கரவெட்டி பெரிய பரப்புடையது கரவெட்டி பல பகுதிகளுடையது, அதில் விக்னேஸ்வராவைச் சுற்றியுள்ள பகுதியை மட்டும் எழுதியுள்ளேன். அதிலும் தவறு விட்டிருக்கலாம். அதற்காக என்னை மன்னிப்பதுடன் உங்களுக்குத் தெரிந்தவராகவோ நீங்களாகவோ இருந்தால் என்னை மன்னித்து உங்கள் விபரங்களை எனக்குத் தந்தால் தொடர்ந்து அடுத்த இதழில் இத்தவறுகளை திருத்தமுடியும்.

**திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம்**

# விக்னேஸ்வராக் கல்லூரியும் கல்விப்பணியும்

பெற்றதாயும், பிறந்த பொன்நாடும், கற்றகல்லூரியும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே. அந்த வகையில் இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் ஈழமணித்திருநாட்டில் வடமராட்சியில் கரவெட்டி எனும் கிராமத்தில் மருதநிலத்தின் கண்ணே நுகவில்வயல் அழகு செய்ய பொலிவுற்று விளங்குகின்றது எம் கல்லூரி. இது விக்னேஸ்வரப் பெருமானின் திருவருள் நிறைந்த இடமாக திகழ்வதனால் விக்னேஸ்வராக் கல்லூரி என்னும் நாமம் பெற்றது. எம் கல்லூரி புகழ் பெற்றதற்கு கல்லூரியின் கட்டடங்கள் அல்ல காரணம். இக்கல்லூரியால் உயர்வு பெற்ற அறிஞர்களும், சாதனையாளர்களுமே ஆகும்.

இவ்வாறு சிறப்பு மிக்க நம் கல்லூரியின் வளர்ச்சிப் படிகளையும் தோற்றத்தினையும் நாம் எல்லோரும் அறிந்து செயற்படல் வேண்டும். அந்த வகையில் எமது பாடசாலை 1917ம் ஆண்டு இராசவாச முதலியார் வீரவாகு சிற்றம்பலம் அவர்களால் அவரது உறவினரின் காணியில் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு பாடசாலையை ஆரம்பித்தல் நூறு சிறைச்சாலைகளை மூடுவதற்குச்சமமானது. அந்த வகையில் வீரவாகு சிற்றம்பலம் ஐயா அவர்கள் கரவெட்டி மண்ணிலே எமது கிராமத்திற்கு சிறந்த பாடசாலையை நிறுவியமையால் எங்களுடைய மனங்களில் எல்லாம் வைத்து போற்றப் படவேண்டியவராவார். இவர் கரவெட்டி மண்ணில் இன்னும் பல பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட காரண கர்த்தாவாக திகழ்ந்தார்.

யா,விக்னேஸ்வராக்கல்லூரி ஆகிய எமது அறிவாலயத்தில் முதலாவது அதிபராக விளங்கியவர் திரு V.K கிருஸ்ணபிள்ளை இவர் நவிண்டிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர்கள் கல்வி அறிவினை மாணவர்களுக்கு அள்ளிவழங்கினார், இரண்டாவது அதிபராக தென்னிந்தியாவைச்சேர்ந்த திரு K. இராமசாமி அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் கல்விக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்களுள் ஒருவர். மூன்றாவது அதிபராக கேரளாவைச் சேர்ந்த திரு K. P அச்சுதன்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டார். அதன் பின் திரு K. G பத்மநாதப்பிள்ளை, திரு K. சிவப்பிரகாசம், திரு V. சோமசுந்தரபண்டிதர் பொன். கணேசன், திரு V. தங்கராசா, திரு T. நமசிவாயம், திரு. செல்வராசா, அம்பலவாணர் போன்றோர் அதிபர்களாக கடமையாற்றினர்.

எமது கல்லூரி மின்சார வசதிகளுடன் விளங்க திரு. இராசையா அவர்கள் காரணகர்த்தாவாகத் திகழ்ந்தார். எமது கல்லூரி உலகளாவிய ரீதியில் கல்வியில் முன்னின்றது. எமது பாடசாலைக்கு புதியதாக பல

வளங்கள் திரு. பண்டிதர் பொன். கணேசன் அவர்களால் எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் "பங்கம்சிங்கம்" எனும் நாடகம் 1951ம் ஆண்டு முதலிடம் பெற்றது. அதன்பின் இரண்டாவது நாடகமாக 1955ம் ஆண்டு "சுயபாஷா" எனும் நாடகம் பரிசினை வென்றது. இப்படிப்பல வழிகளில் கல்வி முன்னேறியது. எமது பாடசாலையில் அக்காலத்தில் எல்லாம் கட்டுரை, கவிதை, நாடகம் எனப்பல செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட்டு மாவட்டம் மாகாணம் வரை சென்று முதலிடம் பெற்று வந்தார்கள். எமது பாடசாலையில் அக்காலத்தில் ஆசிரிய ஆசிரியைகள் பலர் இளைஞர்களாகவே இருந்தனர். அவர்கள் கல்வித்துறையில் மட்டுமின்றி விளையாட்டுத் துறையிலும் மாணவர்களை முன்னேற்றினார்கள்.

எமது பாடசாலை இம் மாவட்டத்திலே புகழ்பூத்த பாடசாலை ஆகும். எமது பாடசாலையில் கல்வி கற்றுப் பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் திரு. கந்தையா, திரு. க.ஜெயக்கொடி, திரு. மு. சிவசிதம்பரம் என்பவர்களாவர். எமது பாடசாலையில் இருந்து பலர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி சென்றுள்ளனர். பலர் பட்டம் பெற்று உயர் பதவி நிலைகளை வகித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் எம் கல்லூரித் தாய் மிகுந்த பெருமிதம் அடைகிறாள். 1990 ஆண்டிலிருந்து எமது பாடசாலையில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், நாடகக்குழு, சாரணர் இயக்கம் எனப்பல துறைகளிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அக்காலத்தில் கரைவையூரில் சிறந்த பாடசாலை விக்னேஸ்வரக் கல்லூரி ஆகும். பலகல்விமான்கள், வித்தகர், பேராசிரியர்கள், வைத்தியகலாநிதிகள் எனப்பலரை உருவாக்கியது நம் கல்லூரி.

எமது பாடசாலை ஆரம்ப காலத்திலிருந்தே இராமசாமி சின்னத்தம்பி, கிருஸ்ணபிள்ளை, சிற்றம்பலம் என நான்கு இல்லங்களைக் கொண்டுள்ளது. எமது பாடசாலையில் திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் சிறந்த உயிரியல் ஆசான் ஆவார். அவர் பல மாணவர்களை வைத்தியராக்கினார். பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் சிவலிங்கராஜா எனப்பலரும் எமது பழைய மாணவர்களும் பேராசிரியர்களும் ஆவார்கள். இவர்கள் புகழ் மங்காது இருப்பது போல எமது பாடசாலையின் புகழும் மங்காது. எமது பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் லண்டனில் பழைய மாணவர் சங்கம் ஒன்றையும் எமது கல்லூரிக்கு என நிறுவியுள்ளனர்.

எமது பாடசாலை 1992ம் ஆண்டு 75ம் ஆண்டுவிழாவை கொண்டாடி முடித்தது. எமது பாடசாலையில் பல ஆசான்கள் 25வது விழாவுடன் இயற்கை எய்தினார்கள். பவளவிழாக்கண்ட எமது பாடசாலை நூற்றாண்டு விழாவை 2017ம் ஆண்டு கொண்டாடவுள்ளது. அதற்காக எமது கல்விப்பணி மெருகூட்டப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எமது பாடசாலையில் 14வது அதிபராக திரு. சிவசிதம்பரம் அவர்கள் இப்போது

சேவையாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் கல்விமுன்னேற்ற மடைய வேண்டும் என்ற நோக்குடன் சேவை வழங்கி வருகிறார். இவர் பணி நீடித்து நிலைத்து இருக்க விக்னேஸ்வரனை வேண்டி நிற்கிறோம். எமது பாடசாலையில் இரசாயனவியல், உயிரியல், கணனி, நூலகவசதிகள் எனப்பல ஆய்வு கூடங்களும் பல கல்விசார் மன்றங்களும் உண்டு எமது பாடசாலையில் 12 கட்டிடங்கள் உண்டு. எமது பாடசாலை மாணவர்கள் தற்போது பலதுறைகளில் முன்னேறி முன்னனியில் நிற்கிறார்கள். எமது பாடசாலையில் இப்போது இளைய தலைமுறை ஆசிரிய ஆசிரியைகள் கற்பிக்கிறார்கள். எமது பாடசாலைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் வடமராட்சியில் புகழ்பூத்த பாடசாலையாகத் திகழ்கிறது. எமது பாடசாலை மாணவர்கள் காலந்தோறும் அகில இலங்கை ரீதியில் பல சாதனைகளை ஆற்றியிருக்கின்றனர்.

கல்வி நிலையில் சென்ற ஆண்டு வர்த்தகப் பிரிவில் செல்வன் கை. திருக்குமாரன் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். எமது பாடசாலை தமிழ் அறிவுப்போட்டி, நாடகங்களிலும் பங்கு பற்றி சாதனை படைத்துள்ளது. எமது பாடசாலைக்கு மைதான வசதியினைக் கனகசபை ஐயா அவர்கள் வழங்கியுள்ளார். தற்போது எமது பாடசாலை விளையாட்டுப் போட்டி கடந்த 10.03.2007 அன்று நடைபெற்றது. எமது பாடசாலையைச் சேர்ந்த பல மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எமது கல்விக்காகத் தம்மையே அர்ப்பணித்து காலநேரம் பாராது அயராது முன்னின்று பாடுபடுகிறார்கள். எமது பாடசாலை மாணவர்களும், தமிழ்த்தின, ஆங்கிலதின போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெற்று பாடசாலைக்கும், ஆசிரியர் சமுகத்திற்கும் பெற்றோரிற்கும் புகழ் ஏற்படச் செய்து வருகின்றனர். இவ்வாறு பாடசாலைச் சமூகமாணவர்களாகிய நாமும் முன்னின்று பாடுபடுவோமாக. உண்மைவெல்லும் மகுடவாசகத்தை ஆதாரமாகக் கொண்டு மென்மேலும் வளர்ச்சி பெற மாணவர்களாகிய நாம் உறுதியோடு உழைப்போமாக.

“ வாழிய விக்னேஸ்வரா”

“ வளர்க கல்விப்பணி”

நன்றி.

லோகநாதன். ஷர்மினி

9c

கீழ்பிரிவு (கட்டுரை)

(முதலாமிடம்)

# அழு! எழவே!

ஓ எழில் மழலையே
அழுகையே முதல் ஒலியாய்
ஆனபொருள் அறியாயோ
அன்னையின் ஆதாரம் வேண்டி
அடைமழையாய் அழுதாய்
அடிவயிற்றில் பசி உணர
வீலென மீண்டும் அழுதாய்
பாசத்தாய் அவளின்
அமுத திரவம் வேண்டி
தேடல் ஒன்று செய்து
உண்பதற்கு உழைப்புத்தேவை
என்பதைக் கற்றுக்கொண்டாய்
வாழ்த்துக்கள்
மீண்டும் பசி வர
தேவைகளை தீர்க்குமென
தெளிவாகத் தெரிந்து கொண்டாய்
அசைவதற்கும் அணைப்பதற்கும்
அடிக்கடி அழுதாய்
சில திங்கள் உருண்டோட
உனை காக்கும் உயிர் ஒன்றின்
அன்பான முகமொன்றை
தா கா ஆ என
கற்கால மானிடத்தின்
மொழி அறிந்த மேதை போல்
ஒலி எழுப்பி தேவை எல்லாம்
தாயறிய சொன்னாய்
உடலைப் புரட்டி உடும்பு பிடிக்க
பல நாள் போராடி
தோல்வி கண்டு அழுதாய்
மீண்டும் மீண்டும் முயன்றே
உடலை நிமிர்த்தி ஒருவாறாய்
உன் முயற்சியில் வெற்றிகண்டாய்
தொடர் முயற்சியே
தோல்வியின் மருந்தென
நடைமுறையில் கண்டுகொண்டாய்
கை கால் அசைத்து
வலி பல தாங்கி
தவளவும் ஆரம்பித்தாய்
இப்போதெல்லாம்
எழுந்திருக்கவும் கற்றுக்கொண்டாய்
எழுந்து நடந்திட
எத்தனை எத்தனங்கள்
தடுக்கி விழுந்திட
எத்தனை அழுகைகள்
இரு கால்கள் போதாதோ
தாயவளின் கைகொடுப்பும்
மூன்றாங் காலாய்
எழுந்திட நடந்திட
அவசியமானதோ உனக்கு
துள்ளிக் குதித்தோடி
விளையாடும் பருவத்தில்
பொம்மை வேண்டி அழுதாய்
சிறுவனாய் ஆகி
குளப்படியும் குறும்புகளும்
தொடராக நீ செய்த
கண்டிப்பும் தண்டிப்பும்
தவறாமல் நீ பெற்றே
மாரித் தவளை போல்
மாறாமல் நீ அழுதாய்
அழைப்பு வந்தது
அகரம் படிக்க
புரியாத பருவத்தில்
பள்ளி ஒரு சிறையாச்சு
பள்ளி செல்லவும் பலநாள் அழுதாய்
இடையில் கல்வி பயில
தடைகள் பல கண்டு
தோற்ற படைபோல் அழுதாய்
வாலிபத்தில் மனதால்
பெண்ணுக்காய் அழுதாய்
தேறாத காதல் பல கண்டு
மாறாமல் மனதால் அழுதாய்
இருபத் தெட்டில் நீ
திருமணத்திற்கழுதாய்
வாழ்வு கிடைப்பதற்கு அழுதாய்

கிடைத்தபின் கூட்டுப்போரிலே
மறைவாய் சலித்து அழுதாய்
விரும்பி வாழ்ந்து கொண்டே
விரக்தியிலும் அழுதாய்
முப்பத்திரண்டிலே மூப்பு
சித்திரமாய் பிள்ளை
வேண்டுமென அழுதாய்
நாற்பதிலே உனக்கு
நாலும் வேண்டுமோ
பொருள் புகழிற்கழுதாய்
இருள் சூழ நின்று
பெற்றோர் மறைவிற்கு அழுதாய்
பிறந்தவர் எல்லாம் இறப்பர்
உண்மை தெரிந்தும் அழுதாய்
தோழ்வி துன்பம் பிரிவு
கண்டு கலங்கி அழுதாய்
பேரப்பிள்ளை வேண்டி
பேராசை கொண்டழுதாய்
ஆறுபதிலே முதுமை
இறுதியாத்திரை எப்போ
உன்னை நினைத்தே நீ
மறைவாய் அழுதாய்
உன்முடிவிலும் சிலர்
உனக்காய் அழுவர்
அழுவோரின் தொகை
உன் வாழ்வுசார்ந்தது
ஓ மனிதனே அழு
நன்றாக அழு
அழுவது தவறல்ல
அழுகையே உன்னை தெளிய
வைக்கும்
அழுகைதான் உன்னை
தூய்மைப்படுத்தும்
அழுகை மட்டுமே உனக்கு
வைராக்கியம் தரும்
உன் பாரங்கள் தீரும்வரை அழு
மனம் இலேசாய் ஆகட்டும்
உன் தவறுகளை எண்ணி அழு
நீ திருந்தியதை உன்மனம்
உணர்ந்து கொள்ளட்டும்
முடிந்தால் பிறருக்காய் மழைபோல்
அழு
உன்னால் சிலர் நன்மை
அடையட்டும்
எந்தத் தவறை செய்தாயோ
அதை மீண்டும் செய்யேன்
என உனக்கு உறுதிகொடு
உன் அழுகை அர்த்தப்படும்
உன் தோல்விக்காயும்
ஒரு முறை அழுதுவிடு
தவறேதும் இல்லை
அந்த அழுகையின் முடிவில்
எதற்காய் அழுதாயோ
அதை வெல்ல சபதமெடு
அழுகை உன்னை வெல்ல வைக்கும்
அழுகையின் எல்லை
ஆனந்தம் என்பதை உணர்
வாழ்வெல்லாம் நீ
அடிக்கடி அழுதாலும்
அது உன் ஏற்றத்திற்கே
என்பதை ஏற்றுக்கொள்
உன்னை தட்டிக்கொடுக்க
எவரும் இல்லாவிடினும்
உன் தோள்களை
நீயே தட்டிக்கொடு
வெற்றி தோல்வி
இன்பதுன்பம் யார்கையில்
முயற்சிமட்டுமே உன் ஆயுதம்
நடப்பதை ஏற்றுக்கொள்
இனி உன் ஒவ்வொரு அழுகையும்
உன் எழுகைக்காய் அமையட்டும்
அதோ அங்கே பார்
அழுகையின் பொருளறியாது
ஏற்றமின்றி மாற்றமின்றி
வாழ்வெல்லாம் அழுதுதீரப்போருக்கு
அழுகையின் பொருள் கூறவேண்டும்
ஆதலால் போய்வருகிறேன்.
ஆக்கம்:- **கரவை மதிவேந்தன்,** கனடா

பாடசாலையின் இன்றைய நூலகமும்,கணிப்பொறி அறையும்










சென்ற வருட பழைய மாணவர் சங்க கலைவிழாவில்
நடந்த நிகழ்ச்சிகளில் சில





# இலங்கை நாடாளுமன்றப் பேரவையைச் சிறப்பித்த கல்லூரியின் பழைய மாணவர்கள்



திரு. P. கந்தையா



திரு. K. ஜெயக்கொடி



திரு. M. சிவசிதம்பரம்

தாபகர்



இராசவாசல் முதலியார்
வீரவாகு சிற்றம்பலம்



ஆ. சுப்பிரமணியம்



A. சின்னத்தம்பி




க. சிவபாதசுந்தரம்



சு. அஞ்சலி வே. லீலாரட்ணம், இ. ஈஸ்வரஞானம்,
ந. சிவலிங்கம், பி. ஞானதுஸ்யந்தி, சி. கர்ணன், தோ. பத்மசிறீ



விக்னேஸ்வரா பழைய மாணவர்கள்
கால்பந்தாட்டக்குழு


In admiration of the continuing luxuriant growth of our
great Scholar and Intellectual Emeritus Professor
Karthigesu Sivathamby on his 75th birthday
International Biographical Centre
Cambridge
Outstg. Scholar & Intellectual
20th Century
ThiruVe.KaAward
2000
Man of the year Award
Governor N.E Province
Curriculum Designing
University level
Patron
Colombo Tamil
Sangam
Publications
Books & Monographs
English -11
Tamil -35
Chairman T.R.R.O
Jaffna 1986-98
Chairman
Co-ordinating
Committee of citizens, N&E
1984-1996
Membership in
Editorial
Committee-Journa
Offices in Academic & Cultural Bo
(5 Offices)
Literary Criticism
Culture/Communication among Tamil
Honorary Degree and Awards
Social history
Tamil literary hist.
University
Jaffna
University of
Kerala
University of
Madras
Bandaranaiake
International St
Madras
1987-1988
Hyderabad
1984
Thanjavur
1982
Madurai Kamaraj
University
Guidance and Assessment
Visiting Prof.
Chennai
1998-1999
University of
Peradeniya
Norway
1993
Kualalampur
1995-96,1996-97
Ph.D.
Visiting Prof.
Radio, Drama,
California
1989
England
1984
Director
Producer
Actor
Scandinavia
1988
Sweden
1989
Finland
1992-1993
University of Jaffna
1978-1996
Eastern University
1996-1998
Assistant Lecturer
1965-1970
Vidyodaya University
1965-1978
Teacher
Zahira College, Colombo. 1956-1961
Simultaneous Interpreter
Parliament 1961-1965
MA (Tamil)
University of Ceylon 1963.
B.A. (History, Economics and Tamil)
University of Ceylon 1956.
Zahira College
Colombo 1949-1953
Vigneswara college
Karaveddi upto 1948
"Puthuppalli"
KARAVEDDI
World of Scholars
Eealam
South Asia
World of intellectuals

**விக்னேஸ்வராக்கல்லூரி**
**கரவெட்டி**

இலண்டன் பழைய மாணவர் சங்கத்தினருக்கு,
எனது க. பொ. த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றமைக்காக தங்கள் பழைய மாணவர் சங்கம் சார்பாக எனது மேற்படிப்புக்காக பணத்தொகையை தந்துதவியமைக்காக எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இனிவரும் காலங்களில் எமது பாடசாலையின் சார்பில் தெரிவு செய்யப்படும் பல்கழைக்கழக அனைத்த மாணவர்களுக்கும் தங்களால் இயன்ற உதவியை செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**இப்படிக்கு**
**பணிவன்புடன்**
**கை. திருக்குமரன்**

---

விக்னேஸ்வராக்கல்லூரி
கரவெட்டி, மேற்கு
கரவெட்டி.

செயலாளர்,
யா. பழைய மாணவர் சங்கம், லண்டன்
கனம் செயலாளர் அவர்கட்கு,
யா/விக்னேஸ்வராக்கல்லூரி கல்லூரியில் உயர்தரக் கலைப்பிரிவில் கல்விகற்கும் செல்வி. க. குலகௌரி ஆகிய நான் தங்களால் நடாத்தப்பட்ட கட்டுரை போட்டியில் வெற்றி பெற்றமைக்காக தங்களால் வங்கிக் கணக்கு மூலம் அனுப்பபட்ட 1000 ரூபா பெற்றுக்கொண்டேன். தாங்கள் எங்களை ஊக்குவிக்கும் முகமாக எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
உங்கள் கீழ்ப்படியுள்ள மாணவி
மு. குலகௌரி

# MITCHAM PHOTO CENTRE

PROFESSIONAL PHOTOGRAPHIC LAB

# FOCUSCIA

**Tel: 020 8687 2284 Mob: 07958 525 412**

Kiruba and his focuscia fotolab offers his complete professional photographic services to you. From video wedding filming and photography to portraits and photographic restoration. No occasion too big or small. We serve our community with pride and professionalism

I also offer a complete service to professional photographers and film makers in addition to forensic photography to solicitors and the immigration service. you can view a port folio of my work at address below.

243 London Road
Mitcham, Srrey
CR4 3NH




- Prints From Any Media
- Studio Portrait.
- Digital Passport & ID Photo's.
- Photo's onto Canvas.
- Photo's onto Metal Pendant.
- Photo's onto T-Shirt & Mug
- Photo's Repair & Retouching.
- Enlargement & Poster Printing.
- Photo's Slid Show CD & DVD
- Photo Story Books.
- Photo's onto Calender.

- Photo Accessories & Digital Media.
- Picture Framing Service.
- Frames & Albums.
- Mounting & Lamination.

**PROFESSIONL SERVICES**


Professional service for Photographers And Amateur Photographers.
Print From Any Sizes.
Professional Color Correction
Graphic work for Albums

VIDEO & PHOTOGRAPHY
*For All Occasion*

**தொடர்புகளுக்கு**
கிருபா & கிரி

VISIT OUR WEB SITE
www.mitchamphotocentre.com
Serving the community for over 25 years


EMBON WHOLESALERS
NEW CASH & CARRY IN
BOND HOUSE, BOND ROAD, MITCHAM, SURREY CR4 3HG
* Toiletries
* Baby Care
* Stationery
* Washingup Liquid
* Kitchen Towel
* Lighter, Matches
* Cleaning Sponge
* Household Products
* Disposable Items &
* Much More
SAVE £££'S
020 8646 1007
Fax: 020 8646 8787
Ample free parking


London's Largest Selections
RATHY
JEWELLERS & SILK HOUSE
22 Carat Gold and Diamond Jewellery Dealers
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
Opening Hours:
Mon-Sat 10am to 6.30pm
Sun 12 to 6.30pm
28 Ealing Road, Wimbledon, Middlesex HA0 4TL
Tel: 020 8903 3063 / Fax: 020 8903 9711


15 வருடங்களாக மக்கள் சேவையில்
இலண்டன் வாழ் தமிழர்களின் இதயங்களில் நீங்காத இடத்தில்
BEST FOODS
Super Market
தென்கிழக்கு இலண்டனிலும், மேற்கு இலண்டனிலும் மக்களின்
அபிமானத்தைப் பெற்ற நிறுவனம்
364 – 366 Bath Road
Hounslow
020 8577 6002
259 – 261 London Road
Croydon
020 8684 6269
249 Northolt Road
South Harrow
020 8423 9933
இலங்கை இந்திய உணவுகள்
சுவையூட்டிகள்
கடலுணவுகள்
உடன் மரக்கறிகள்


Ganapathy Party Organisers
Wedding
Receptions
Birthdays
Arangetram & Puberty
போன்ற அனைத்து
உங்களது வைபவங்களுக்கு
உங்கள் மண்டபங்களை தரமாக
அலங்கரிக்க எம்மை நாடுங்கள்.....
Contact:
020 8686 1408
07984 149 083 | 07930 162 722


Ganapathy Textile
* பட்டுபுடவைகள்
* மைசூர் சில்க்
* Cotton புடவைகள்
* சல்வார் கமிக்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
* ஆடவர் ரெடிமேட் ஆடைகள்
* Immitation Jewelleries
* Cosmetic Items
020 8686 1408
182 London Road, Croydon, Surrey CR0 2TF


Step in to the World of Diamonds
DIAMONDS PALACE
76 Tooting High Street, London SW17 0RN
T 020 8767 5333 F 020 8767 5814
Mithus
322-324 London Rd, Croydon CR0 2TJ
T 020 8683 1756 F 020 8683 1792
EUROPE DIGITAL 07828 828 544



நமக்கென்றோர் நகைமாளிகை
ஒன்றல்ல! இரண்டு!
DIAMONDS PALACE
MITHUS JEWELLERY
மங்கையர்க்கு எழில் சேர்க்க
வைர மாளிகை புதுப்பொழிவு
நிதம் பரவ வைரமாளிகை
பொன்னகைக்கு மறுபெயர்தான்
வைரமாளிகை மண்ணுலகில்
மயன் படைத்தான் வைரமாளிகை
ஆமாம் செல்லும் இடமெல்லாம்
இதே பேச்சு
322 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792
76 Tooting High Streey
London SW17 ORN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814

High Class Butchers
JR
The No 1 Halal Choice

நாம் கடந்த 15 வருடங்களாக தமிழ் சமுதாயத்திற்கு தரமான உடன் இறைச்சி வகைகளை வழங்கி வருகின்றோம். தரத்தின் மறுபெயர் **J.R. Halal** ஆகும்.

*Free home Delivery Service*

எமது ஸ்தாபனத்தில் ஒரே முறையில் £25.00க்கு மேல் கொள்வனவு செய்வோர் இவ்விளம்பரத்தைக் கொண்டு வருவோரும் போது **£5.00** கழிவாக வழங்கப்படும்.

**163, Upper Tooting Road,**
**Tooting,**
**London SW17 7TJ**

**Tel: 020 8682 3949**
E-mail:info@jr-butchers.co.uk
www.jrbutchers.co.uk

Watch Me
seeing is believing




அறுசுவை குன்றாத இலங்கை
தென் இந்திய
உணவுவகைகள். ஒருமுறை
வாருங்கள்!
வந்து சுவையுடன்
உண்டுமகிழ்ந்து பாருங்கள்!

## Indo Srilankan Tandoori Restaurant

108 Morden Road
South Wimbledon
SW19 3BP

Car Park in
Princess of Wales of Pub
[ T ] 020 8286 7900

fully licenced and
fully airconditioned
Opening Hours 12 noon to 12 midnight



Western
jewellers
Jewellers & Gem Merchants
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone:
020 8767 3445
Opening Hours
Monday to Saturday
10.00am - 6.30pm
Sunday
11.00am - 5.30pm
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 020 8672 1900
Season's best is "Summer"
Saree's Best is "Silk Emporium Sarees"
Western
Jewellers & Textiles
5, Plaza Parade, 29 - 33 Ealing Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909

# WARAN & COMPANY

**Chartered Certified Accountants**
**Chartered Tax Advisers**
**Independent Financial Advisers**

- Accountancy & Audit
- Book Keeping & VAT Returns
- Payroll & Year End Returns
- Company Formations
- Advise on Business Startup
- Business Plan & Cash Flow Forecasts
- Management Accounts

- Mortgages up to 95%
- Re-Mortgages
- Self Certifications (No proof of income required)
- Buy To Let Mortgages
- Commercial Mortgages
- Business Loans
- Competitive Rates
- **No broker Fee**

- ❖ Tax Compliance
- ❖ Tax Planning and Avoidance Schemes
- ❖ Tax Investigations Work
- ❖ Self Assessment Tax Returns
- ❖ Attending VAT, PAYE Visits
- ❖ CGT, IHT Planning
- ❖ International Tax Planning
- ❖ Setting up Off Shore Trusts
- ❖ Specialist in IR 35 and Off Shore Company set up for Contractors

✓ Pensions
✓ Life Assurance
✓ Investments

**For Free Initial Consultation**

**Contact: Ramesh Parameswaran**
***FCCA, ACMA, ATII, MLIA (Dip)***

**Tel:** 0208 949 8968
**Fax:** 0208 605 0755
**Mobile:** 07956 985 608
**Email:** waranramesh@aol.com

20 Green Lane
New Malden
Surrey
KT3 5BN

Authorised & Regulated by The Financial Services Authority for Investments, Pensions, Insurance & Mortgages

# Letzmove Property Ltd

*... let us work for you*

## Lettings

## Looking to Rent

We have large selection of properties available to Rent in Following areas:

Tooting - Mitcham - Collierswood

Malden - Streathem - Croydon - etc.,

## Landlords

Lower Commission

Best Rent Achieved

Free Valuation - No Obligation

Professional Tenants

Tenants Referencing

Inventory Prepared

## Sales

Lower Commission

Advert on Web & Papers



புதிய பரிமாணத்துடன்
சிறந்த சேவையாற்ற...

**RESIDENTIAL & COMMERCIAL ▶ SALES ▶ LETTINGS ▶ MANAGEMENT**

182 Mitcham Road, Tooting, London SW17 9NJ Tel: 020 8767 5800 Fax: 020 8696 1900
Email: info@letzmoveproperty.co.uk Web: www.letzmoveproperty.co.uk

# STARR ESTATES LIMITED

**Estate Agents - Valuers - Surveyors - Property Consultants**

T: 020 8427 5328 | MOB: 07956 543 044 | FAX: 020 8427 6126




- ✓ Sales | Lettings
- ✓ Property Management
- ✓ Surveys | Valuations
- ✓ Mortgages | Re-Mortgages
- ✓ Commercial Loans
- ✓ Buildings & Contents Insurance
- ✓ Life Insurance

Advice and assistance on purchase of investment properties abroad including Europe, Middle East (Dubai) and far East

Please call us with your requirements
Advice on Financial Services provided by qualified advisors



**Mr M K Sritharan (Property Consultant)**
**Mrs Ramani Sritharan (Director)**

**Email: info@starrestatesltd.co.uk**
**Web: www.starrestatesltd.co.uk**

**Central Parade, Station Road, Harrow**
**Middlsex HA1 2TW**

Printed by Vasan Printers 020 8646 2885